தென்றல்

விலை 16 புதிய காசுகள்

~ ஆசிரியர்: கண்ணதாசன் ~

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, பங்குனி 15 (28-3-'59). சனிக்கிழமை | இதழ் 41

மருதை சமைத்தாள் கணவன் சுவைத்தான்!

பழவேற்காட்டிற்குப் போகும் பாதையில் "திருப்பாலைவனம்" எனும் ஊர் உள்ளது. இவ்வூர் இன்றும் ஒரு சிறந்த அழகிய ஊராய்த் திகழ்கின்றது.

கழனி வேலைகளை முடித்துக் கொண்டு மருதையும் வேலனும் வரப்புமேல் நடந்து வரும் நடையே ஒரு அலாதியானது. ஆணும் பெண்ணுமாக இவர்கள் நடந்து வரும் நடையழகைக் கண்டு பலர் வியந்தனர். அவ்வியப்புக்குக் காரணம் இவர்களது நோயற்ற வாழ்வும் அழகிய உடற்கட்டேயாகும். திருப்பாலைவனத்தில் வாழும் பல மக்களுக்கும் சென்னைக்கும் தொடர்புண்டு. சென்னையின் சில போலி நாகரிகங்களைக் கொண்ட அவ்வூர் மக்களுக்கு இவர்களது வாழ்க்கை ஒரு புதுமையாகவே அமைந்தது.

இப்படி ஒத்த பண்பும் ஒத்த குணமும் வாய்ந்த இவர்களது வாழ்க்கையில் குழந்தைப்பேறு இல்லை. குழவி இன்பத்தை நூலளவே கண்ட மருதை தனக்கென்று குழந்தை இல்லையே என ஒரு சில சமயம் ஏங்குவாள்; நீள நினைந்து தவிப்பாள்.

மருதை தன் வீட்டின் பின்புறத்தில் உள்ள தோட்டத்தில் மா, தென்னை, வாழை, கொய்யா, கிச்சிலி முதலிய மரங்களையும், முல்லை, நஞ்சாவட்டை, சப்பாத்தி, பவழமல்லி முதலிய மலர்ச் செடிகளையும், கத்தரி, வெண்டை, பூசணி, மிளகாய் முதலிய பருவச் செடிகளையும், தாதுவளை, மனத்தக்கள்ளி, அரக்கீரை, கரிசலாங்கண்ணி, பொன்னாங்காணி முதலிய கீரை வகைப் பயிர்களையும் வைத்து அதனை நாளும் போற்றி வளர்த்தாள். ஓரிரண்டு குழந்தைகளுக்குப் பதில் மருதை இத்தனை குழந்தைகளைக் கட்டிக் காத்து பேணி வளர்ப்பதில் ஒரு அலாதியான பெருமை கொண்டாள்.

இப்படிப்பட்ட பண்பாடுடைய குடும்பத்தை, சுருசுருப்புள்ள குடும்பத்தைக் கண்டால் யாருக்குத்தான் பொருமை வராது. குறைந்த உழைப்பு- அதிக வருவாய், அல்லது அதிக நலம் அல்லது உழைக்காமலே பிறர் உழைப்பில் தாங்கள் பங்கு கொள்ளவும், பிறர் உழைப்பில் அல்லது வெற்றியில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தும் சிலர் வேலன் மருதை உழைப்பில் சிறிது காழ்ப்பே அடைந்தனர். இது உலக இயற்கையில் ஒன்றுதானே. பல்லோர் பழிப்பினும் வேலன் மருதையின் குடும்பம் இலட்சியக் குடும்பமாய்த் திகழ்ந்தது.

முக்கியமாக மருதை தொல்காப்பியர் பொருளதிகாரச் செய்திகளை ஊன்றிப் படித்து அதன் கருத்துக்களை தமிழரிடைப் பரப்பவே இப்படிப்பட்ட இலட்சிய வாழ்க்கையைக் கொண்டாள் போலும். மருதை ஒருவகையில் வேலனுக்குத் தமிழ் ஆசிரியராகவே விளங்கினுள். மருதையின் இல்லற வாழ்வு பொய்யில் புலவன் கூறிய இல்லற வாழ்வை ஒட்டி அமைந்தது. இவர்களது ஒற்றுமையையும், வாழ்க்கையையும், இவர்கள் வறுமையிற் செம்மை காணும் சிறந்த உள்ளம் படைத்தவராய்த் திகழ்தலையும் கண்ட திருப்பாலைவன மக்கள், வேலன் மருதை இதய ஒற்றுமையைப் புகழ்ந்தனர். சிலர்மருதையும் வேலனும் ஈருயிராய்த் திகழாது ஒருயிராய்த் திகழ்ந்து அவர்களது வாழ்க்கை ஒளிபடத் திகழ்வதை நினைந்து நினைந்து பெருமூச்சுவிட்டனர். வாழ்வென்ருல் இதுவேயாம் எனப் பலர் போற்றவும் செய்தனர். இவர்கள் வாழ்க்கை இப்படி ஒளி படத் திகழ்வதற்குக் காரணம், இவர்கள் நோயற்ற வாழ்வில் வாழும் வாழ்க்கையின் இரகசியம் ஒரு நாள் வெளிப்பட்டுவிட்டது.

ஒரு நாள் திருப்பாலைவனம் நாட்டாண்மைக்காரன் பாண்டியன் வேலனைத் தேடிச் சென்றுன். வேலன் அப்பொழுதுதான் கழனியிலிருந்து வந்து மனைவி அன்புடன் பிசைந்து தரும் கீரைச்சோற்றை சாப்பிட்டவண்ணம் இருக்கிருன். இதனை அறிந்த நாட்டாண்மைக்காரன் வேலன் வருகையை நோக்கித் திண்ணையிலேயே உட்கார்ந்தார். துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்த நாட்டாண்மைக்காரன் பாண்டியன், வேலன் மருதை உரையாடலைக் கவனித்த வண்ணமும் இருந்தான். தான் வந்திருப்பதை அவர்களுக்குச் செல்லவே இல்லை.

மருதை: அத்தான்! இன்று கரிசலாங்கண்ணி பருப்புக்கூட்டு எப்படி?

வேலன்: கூட்டா இது! சுவையா இது! மாம்பழ இனிப்பும், பலாப் பழத்தில் உள்ள தேன் சுவையும் கலந்தல்லவா இருக்கிறது?

மருதை: மாமா! என்ன கவிஞுகிவிட்டீரோ?

வேலன்: இதற்குக்கூடவா கவிஞன் தேவை. உனது கீரைச்சோறு மாவின் சுவை. அதில் உள்ள பலாவின் தேன் சுவை, அச்சோற்றில் நீ உன் காதலையும் பிசைந்து தருவது.

மருதை: மாமா! அப்படி ஒன்றும் இல்லை. கரிசலாங்கண்ணி கீரைக்கே அச்சுவைகள் உண்டு. எங்கப்பா இக்கீரையைப்பற்றி கதை கதையாய்ச் சொல்லுவார். அத்தான்; கரிசலாங்கண்ணி ஒரு பருவச் சிறு செடி. தரையோடு படர்ந்து கிளைகள் மேலெழுந்து நிற்பதும் உண்டு. இதில் நீலம், மஞ்சள், சிகப்பு, வெள்ளை என நான்கு வகைகள் உண்டு. முதல் மூன்று வகையும் பெரும்பாலும் கிடைக்காது. கிடைப்பது அருமையே.

வேலன்: ஆமாம்! மருதை! நீ என்ன தாவரவியல் விஞ்ஞானியோ?

மருதை: அதற்கென்ன அய்யம்! எனது புலவன் தொல்காப்பியன். மொழியியல் அறிஞன், இலக்கண அறிஞன், புவியியல் அறிஞன், விலங்கின அறிஞன், தாவரவியல் அறிஞன், உளவியல் அறிஞன் ஆன அவன் ஒரு பேராசிரியன். அவனது நூலைப் படித்த எனக்கு அதில் கொஞ்சம் பங்கு உண்டு அல்லவா!

வேலன்: போதும், போதும், இக்கீரையால் என்ன பலன். அதைப்பற்றி முதலில் கூறு?

மருதை: அத்தான்! நான் சொன்ன நான்குவிதக் கரிசலாங்கண்ணி வகையிலும் மஞ்சள் வகை இருக்கிறதே அது மிகவும் நல்லது. மஞ்சள் வகையை "பொற்றலை" என்பர்.

வேலன்: மஞ்சள் நிறப் பூக்களை உடையதாயும், அப்பூ பொன்னிறம் உடையதாயும் இருத்தலின் அதனைப் 'பொற்றலை' என்றனர் போலும்.

மருதை: ஆமாம் மாமா! உண்மைதான். இதனைக் 'கையாந்தரை' எனவும் வழங்குவர். இதனை உண்டால் விழிக்கு ஒளியையும், அறிவுக்குத் தெளிவையும், குன்மக்கட்டி நீங்கும் தன்மையும் பெறலாம் என்பர். இராமலிங்கர் தனது திருவருட்பா ஆருவது திருமுறையில், "கரிசலாங்கண்ணி நினைவாற்றலுக்கு நல்லது" எனக் கூறுகிருர். மேலும் பலவித செந்தூரங்கள் செய்யவும், காது நோய், கண் நோய் காசம், இருமல் நோய், முதலியவைகளுக்கு இது கண்கண்ட மருந்தும் கூட.

வேலன்: மருதை நீ பலே பேர் வழி. உனக்கு இதுவரை தமிழ்ச் செய்யுள்கள்தான் தெரியும் என்று நினைத்தேன். கீரைக் கதைகளும் தெரிகிறதே?

மருதை: மாமா! கீரைப் பாத்தியிலே இருந்து கொஞ்சம் கீரை கேட்கத்தான் ஒரு ஆள் வந்து திண்ணையிலே உட்கார்ந்திருக்கிருர். சீக்கிரம் மென்று சாப்பிடு.

வேலன்: மருதை! நீ என் மனைவி மட்டும் அல்ல; நான் பெற்ற செல்வம்-அல்லது கண்ட செல்வம், கொண்ட செல்வம் என்று கூறலாம். கீரைச் சோறு போதும். கொஞ்சம் மோர் போடு. நேற்று பொன்னாங்காணி கீரையை மிளகு போட்டுத் துவட்டி வைத்தனையே, அது இதைவிடச் சுவையாக இருந்தது. அதனைக் கண்ணிற்கு நல்லது என்றுகூடச் சொல்கிருர்களே?

— 9-ம் பக்கம் —

கிள்ளுக்கீரையானுலும் அதில் கொள்ளை நலம் உண்டு என்பதை உரையாடல் மூலம் தெரிவிக்கிருர் சென்னை மகளிர் மன்றத்தைச் சேர்ந்த இதன் ஆசிரியர்.

காம்ரேடுகளைப் பற்றி...

இந்தியக் கம்யூனிஸ்ட்களின் வழிகாட்டியான ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது மாநாட்டின் மகத்தான சாதனைகளையும், மனங் கவர்ந்த நிகழ்ச்சிகளையும் மாஸ்கோ சென்றுவந்த தமிழ்நாட்டுக் காரிய தரிசியின் கட்டுரைகள் தெரிவிக்கின்றன. மக்களாட்சிப் பண்புக்கு மரணச்சீட்டு வழங்கப்பட்ட செய்திகளையெல்லாம் அந்தக் கட்டுரைகளிலே காணமுடியவில்லை. மிகவும் கட்டுப்பாட்டுடன் மறைத்துவிட்டாலும் மாஸ்கோவிலிருந்தும் அதன் பிடியிலே சிக்கியுள்ள சிறிய நாடுகளிலிருந்தும் மக்களாட்சி முறைகள் புதை குழிக்குத் தள்ளப்படும் செய்திகள் வெளி வந்துகொண்டுள்ளன. "ரஷ்யாவில் 'உஸ்பெக்' ராஜ்யப் பிரதமராக இருந்த 'அகமெடோவ்' என்பவரும் உஸ்பெக் கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி 'கமலோவ்' என்பவரும் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். கட்சியில் உள்ள குறைபாடுகளுக்கு இவர்களே பொறுப்பு என்று குற்றம் சாட்டப்பட்டனர்" - இதுவும் அவைகளிலே ஒன்று! "ரஷ்யாவுடன் கலகம் செய்து சுதந்திரமான துர்க்மினிஸ்தான் குடியரசை ஸ்தாபிக்க சதி செய்வது கண்டுபிடிக்கப்பட்டதையொட்டி துர்க்மினிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டது என்று இத்தாலிய செய்தி நிலையம் அறிவிக்கிறது" மாஸ்கோவை எதிர்க்கும் செய்தியில் இது இரண்டாவது! ஆங்கில - அமெரிக்க ஏகாதிபத்திய நாடுகளைப் பற்றி இழிவாகப் பேசுவதையே தங்கள் வாழ்வின்பமாகக் கருதியுள்ள கம்யூனிஸ்ட்கள் எல்லாம் மாஸ்கோவிலுள்ள மகான்களும் ஆதிக்க வெறிபிடித்து அலைந்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை இந்தச் செய்திகளின் வாயிலாக உணர்ந்துகொண்டால் காலங்கடந்தாவது சுயசிந்தனையுடன் செயலாற்றுகிறார்கள் என்று நம்போன்றோர் நம்ப இயலும்! மாஸ்கோவின் ஆசைகளுக்குப் பலியாக மறுத்த உயர்தர அதிகாரிகள் இருவர் நீக்கப்பட்டதையும், அடங்க மறுக்கும் கட்சிகளைக் கலைத்துவிடுவதும்; கட்டளைகள் தருவதும் கம்யூனிஸ்ட்களின் கண்ணோட்டத்தில் மக்களாட்சிப் பண்பாகுமா? இங்குள்ள கம்யூனிஸ்ட்கள் என்ன சொல்கிறார்கள்? எதிர்த்துப் பேச, கண்டித்து எழுத, என்றாவது முன்வருவார்களா? உரிமைகளைப்பறித்துக்கொண்டு, உலகத்துக்குப் போதனை செய்யும் குருஷ்சேவ்கள், ஆதிக்கவெறி நிறைந்த வெள்ளையர் வர்க்கத்தைவிட எந்த வகையிலே நல்லவர்கள்! ஐந்தாண்டுத்திட்டம், ஏழாண்டுத்திட்டம், இவைகளினாலே ரஷ்யாவின் பொருளாதார நிலை, மாற்றங்களைத் தந்தால், மக்கள் வாழ்வில் வளம்பெருகினால், வாழ்த்துக்களை வழங்கத் தடையில்லை! ஆனால் வலிமையின் பெயராலே வஞ்சகமும் வலைவீச்சும், வாழ்வின் உரிமைகளையும் உயரிய சுதந்திர மகிழ்வையும் பறித்து மனிதர்களை மிருகமாக்குவது வரவேற்கத்தக்கதா?

இந்தியாவிலேயிருக்கின்ற கம்யூனிஸ்ட்கள் - குருஷ்சேவின் கட்டளைக்குக் காத்திருந்து காரியம் செய்பவர்கள், உலகத்தின் பல பகுதிகளிலே எதிரொலிக்கும் முக்கியங்களில் முடிவு கூறமுடியாமல் மூலையில் நின்றுகொண்டுள்ளார்கள்! மாஸ்கோவின் மாநாட்டு முடிவுகள் செய்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை எந்த வகையிலும கட்டுப்படுத்தாது என்று சங்கரன் நம்பூரிபாத் சொன்ன பொன்மொழிகளுக்குச் சரியான சவாலாக எகிப்து நாட்டின் தளபதி கர்னல் நாசரின் கடுமொழிகள் நம்முன்னே நிற்கின்றன! களத்திலே தீரன் என்று விருதுபெற்ற வீரன் காசிம் இராக் நாட்டை கம்யூனிஸ்ட்களின் காலடியில் காணிக்கையாக வைத்துவிட்டார்! குருஷ்சேவ் அதனைப்பாராட்டுகிறார். சேட்பதற்கு வியப்பூட்டும் செய்தியாக இராக் நாட்டின் சுதந்திர உணர்ச்சியைப் பாதுகாக்கப் போவதாகப் பேசிக்கொண்டிருந்த கம்யூனிஸ்ட்கள் ஆட்சியைக் கைப்பற்றி விட்டார்கள். மாஸ்கோ வாழ்த்துக் கூறுகிறது! இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் இந்தச் செயலைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? இவர்களின் சுயபுத்தி வழியா அல்லது மாஸ்கோ மூலவர்களின் வழியா? இந்தியாவிலுள்ள ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்காகவே வெளிநாட்டு ஆணைகளுக்கு அடங்கி நடக்கமாட்டோம் என்று பேசுகின்ற கம்யூனிஸ்ட்களே! அரபு தேசியக் கூட்டணியை உடைத்துவிட்ட உங்கள் தந்தையர் நாட்டுத் திடீர் முடிவுகளுக்கு நீங்கள் ஆராதனை செய்வது ஏன்? மாஸ்கோவில் மழை பெய்தால் மதராசிலும் மதுரையிலும் குடைபிடிப்பவர்கள் கம்யூனிஸ்ட்கள் என்ற ஆதாரத்துடன் கூடிய குற்றச்சாட்டை வீண் பழி என்று மறுத்துரைக்க முன் வருகின்ற தமிழ்நாட்டு சிண்டன்கள், இராக் விசயத்திலே சுயமாகப் பேசத் திராணியுண்டா? ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து மத்தியக் கிழக்கு மக்களைக் காத்திடத் துடித்த மாஸ்கோ மேதைகள், இன்றையத் தினம் இராக் மக்களைத் தங்கள் காலடியில் மிதிபடச் செய்வதை மதராசிலும் மதுரையிலும் மாயவரத்திலும் மன்னார்குடியிலும் இருக்கின்ற கம்யூனிஸ்ட்கள் கண்டிக்க முன்வரவில்லையென்றால், இந்தியக் கம்யூனிஸ்ட்கள் சொந்தச் செயல்முறைகளைக் கொண்டவர்கள் என்பதாகக் கணக்கிடமுடியுமா? இராக், நாசரிடம் நட்புக்கொள்வது இராக் கம்யூனிஸ்ட்களுக்குக் கவலையைத் தரலாம். எனவே அவர்கள் எதிர்ப்பைக் காட்டுகிறார்கள்! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்கு எகிப்து நாட்டு நாசர் எந்த வகையிலே எதிர்ப்பாளர்? ஏன் அவரை நோக்கிப் புன்மொழிகள் பேசவேண்டும்?

இந்தியக்கம்யூனிஸ்ட்களைப்பற்றிக் கூறப்படும் எல்லா வகையான தன்மைகளையும் நாசர் பேசியுள்ளார். அதனால்தான் கம்யூனிஸ்டுகள் குருஷ்சேவின் முடிவுகளை வணக்கத்துடன் வரவேற்றுக் கொண்டுள்ளார்கள்! **"ஒரு பயங்கர அடிமை ஆட்சியை நிறுவுவதற்கு, அரபு மக்களின் விடுதலை வேட்கையைப் பயன்படுத்திக் கொள்ளும் கம்யூனிஸ்ட்கள் துரோகிகள்— வெளி நாட்டின் கையாட்களாவர். கம்யூனிஸ்டுகளைப் பற்றி எனக்குத் தெரியும்; என்னை அவர்கள் - பக்கம் திருப்ப முயன்றார்கள் ஆனால் அவர்களுடைய கருத்துக்களை ஆதரிக்க நான் மறுத்துவிட்டேன். எல்லாக் கம்யூனிஸ்ட்களும் அந்நிய நாட்டின் ஒற்றர்கள். தாய்நாட்டையே விற்றுவிடத் தயங்காதவர்கள்."** இந்தப் பொன்மொழிகள் டமாஸ்கஸ் நகரத்துப் பொதுக்கூட்டத்தில் நாசர் நல்கியவைகள்! இவைகளையெல்லாம் மறுத்துப் பேசும் தகுதி உலகத்தின் 3-ல் ஒரு பகுதியாக வளர்ந்திருக்கும் கம்யூனிஸ்ட்களில் எவருக்கும் இல்லை! சந்திரமண்டலம் தாண்டிய மாவீரன் குருஷ்சேவ் என்ற ஒரே ஒரு நபருக்குத்தான் உண்டு! நாசருக்கு சமாதானக் கடிதம் அனுப்பினார். 21-வது மாநாட்டில் பேசிய பேச்சுக்களை நாசர் மறந்திருப்பார் என்று நம்பினார் போலும்—யோசனைகளைத் தந்தார். நாசர் அவைகளை அலட்சியமாக மதித்தார்! கம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்தையும் முறியடிப்போம் என முழக்கமிட்டார்! சினமென்னும் சிகரமேறி நிற்கிறார் இந்த சிரஞ்சீவித் தலைவர் குருஷ்சேவ்! நாசரைக் கொடியவனென்றும், அகம்பாவக்காரன் என்றும், "பொடிப்பயல்" என்றும் மிக மிக மட்டரகமாக வசைமொழிகளை வாரியிறைத்துவிட்டார்! நாசர் திருப்பித் தரப்போகும் கசையடிகளின் தன்மை எப்படி இருக்கும் என்பதல்ல முக்கியம்—இந்திய உபகண்டத்துக் கம்யூனிஸ்ட்கள் அந்நியநாட்டுக் கம்யூனிஸ்ட்களின் ஏஜெண்டுகளா- இல்லையா என்பதை இப்போது முடிவு செய்ய நல்ல வாய்ப்பு அமைந்துள்ளது. ஆங்கிலப் பத்திரிகைகளும், சென்னைநகரத்து 'பிராவ்தா'வும் அதன் பேனாமன்னர்களும் என்ன சொல்கிறார்கள்? காரைக்குடி கம்பன் விழாவில் 'லட்சியவாதி பரதனே' என்றும், காரல்மார்க்சை மறந்துவிட்டுக் 'கம்பன் காட்டும் வாழ்க்கை நலம்' என்னும் சொற்செல்வம் தந்துவிட்டு வந்து களைப்பாறிக் கொண்டிருக்கும் இலக்கிய மேதையவர்களும் இந்தக் கேள்விகளுக்கு விளக்கம் தருவதால் மனந்துடிக்கும் பல கம்யூனிஸ்ட்களின் மானத்தைக் காப்பாற்றித் தர முடியும்! அரபுக் கம்யூனிஸ்ட்களுக்குப் பரிந்து பேசும் குருஷ்சேவைக் கண்டிக்கிறார் நாசர்—உள்நாட்டு நிலைமைகளுக்கேற்ப கட்சிக் கொள்கைகளை வகுத்திருப்பது உண்மையானால் "உரைகல் வீரர்கள்" ஊமையாவது ஏன்?

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் அந்நிய நாட்டு ஏஜெண்டுகள் என்பதை முன்னேற்றக் கழகத்தவர் இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணிப் பேசும் இழிசெயல் என்கிறார்கள். தமிழ்நாட்டிலேயிருக்கும் கம்யூனிஸ்ட்கள்—அது முற்றிலும் தவறு என்று தெரிவிக்கும் வகையில் பேசியிருக்கிறார் கர்னல் நாசர்! ரசிக்கத்தக்க இரண்டு குறிப்புகளையும் தர விரும்புகிறேன் :—

"இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் யுத்தபிற்காலக் கொள்கையின் திருகுதாளங்களையும், திருப்பங்களையும் சோவியத் அரசாங்கத்தின் அந்நியநாட்டுக் கொள்கையின் உடனடித் தேவைகளின் நேரடி விளைவுகளாகஇருப்பதைக் கொண்டு உணர்ந்து கொள்ளலாம். சோவியத் யூனியன் அந்நியநாட்டுக் கொள்கையுடன் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் இடதுசாரிக் கொள்கையையும் கடைப்பிடித்தது." பம்பாய் சோஷலிஸ்ட் தலைவர் அஜித் ராய் என்பவர் நவம்பர் 7, 1947-ம் ஆண்டில் தான் எழுதிய புரட்சிப் பாதை முன்னுரையில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்! **"ஆகஸ்ட் பதினைந்து கொண்டாட்டத்தில் கம்யூனிஸ்ட்கள் முதல் வரிசையில் நின்றார்கள். நேரு சர்க்கார் வாழ்க என்று வானமதிரும் கோஷம் 'நேரு சர்க்காரைப் பலப்படுத்துவோம்' 'ரயிலோட்டப் போகிறோம்' உற்பத்தியைப் பெருக்குவோம்' என்ற வரட்டுக் கத்தல்களுடன் ஆனந்தப்பள்ளுப் பாடினார்கள்! ஏன்? இந்திய சர்க்கார் என்ற சிமோட்டி சோவியத் 'இரும்பு நெஞ்சனின்' இடுப்பிலே கைகோர்த்து இன்முகம் காட்டி இன்பம் தர வேண்டுமென்பதற்காக!'** இந்த மதிப்புரைகளில் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் பாரதமாதாவின் பண்புகளை பங்கப்படுத்த முயன்றார்கள் என்று தெரிவிக்கிறார் இப்போதைய தமிழ்நாட்டு சோசலிஸ்ட் கட்சியின் தலைவர் கே. அப்பன்ராஜ் அவர்கள் தன் 'புரட்சிப்பாதை' முன்னுரையில் மார்ச் 1950ல்! இந்த வகையான பரம்பரைப் பாரம்பரியமும் பழக்கமும் இருப்பதனால்தான் இன்றைக்கும் இந்தக் கம்யூனிஸ்ட்களுக்கு மாஸ்கோ என்றால் மண்டியிடும்

— 5-ம் பக்கம் —

சபா நாயகர் சங்கடம்!

"வஞ்சம் கொத்துகிறது; வறுமை துளைக்கிறது; பிணி குடைகிறது! உலகில் எத்துணைத் துன்பங்கள் உண்டோ அத்துணையும் உங்களை ஆட்டி அலைக் கழிக்கின்றன. **அறிவேன்!**

அல்லும் பகலும் அல்லல் பல உங்களை அலைக் கழிக்கின்றன. கல்லும் முள்ளுமே உங்கள் காலடியில் படுகின்றன. **வருந்துகிறேன்!**

கால வெள்ளம் நம்மீது கொட்டி விட்டுச் சென்றிருக்கும் சோகக் கோடுகளை அகற்றிவிடுவதென்பது எளிதன்று! கடுமையான உழைப்பும் திட்டமிட்ட திறனும் அவற்றைமாற்றி விடும். **உழைப்பேன்!**

கூட்டத்தில் கூடி நின்று கூவிடுதாலோ, மேடை கிடைத்த இடத்தில் முழக்கிடுவதாலோ, போலிக் கண்ணீர் வடித்திடுவதாலோ, வெற்றி கிடைத்துவிடாது; உங்கள் வேதனை அழிந்துவிடாது! துன்பங்களைக் களைவதற்கு ஒரே வழி, சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லுதல். அந்த இடம் **சட்ட மன்றம்!**

மனித சமுதாயாயத்தின் துன்பங்களைக் கண்டு கண்ணீர் வடித்துருகும் ஏழையர் தோழன்தான்—எளியோர் பாங்கன்தான், அங்கே செல்ல வேண்டும். வினாடிக்கு வினாடி, நினைவையும் உழைப்பையும் உங்களுக்கே— உங்கள் நல் வாழ்க்கைக்கே செலவழிப்போர் தேவை. பட்டம் பதவிக்காகவோ, பலவகைச் சலுகைக்காகவோ சட்ட மன்றத்தை நாடுவோர் சற்றும் நினையார், உங்கள் நல்வாழ்வை! உழைப்பின் சின்னங்களான நானும் என் தோழரும்தாம் சட்டமன்றத்தை உங்கள் வாழ்வின் விடி வெள்ளி வரும் வானமாய், உங்கள் நல்வாழ்வு பாடும் குயில் வாழும் சோலையாய் ஆக்குவோம்! தவருது சென்று, தளராது உழைத்திடுவோம். தருவீர் **வாக்குகள்!**

அடிக்கடி நேரில் வந்து உங்கள் குறை கேட்டும், சட்டமன்றில் அவற்றை எடுத்தோதியும் மாற்றம் காட்டிடுவோம்! மறந்து விடாதீர் மாட்டுப் பெட்டி! **மாட்டுப் பெட்டி உங்கள் பாரத மாதாவின் பெட்டி! மாட்டுப் பெட்டி உங்கள் பண்டிதமாமாவின் பெட்டி!"**

மறக்கமுடியாத பொன்மொழிகளையும், நெஞ்சத்து நீக்கமுடியாத வாக்குறுதிகளையும், 'வேண்டாம்" என மறுக்கமுடியாத ஆசை மொழிகளையும் அள்ளி அள்ளிச் சொரிந்தனர்; காவிரி ஊற்றென, விழிகள் நீர் பொழிந்தன! பொதுமக்களும் நம்பினர், 'காங்கிரஸ் ஒன்றுல்தான் நாட்டின் நலம் வளர்க்கப்படும்; காங்கிரசுக்காரர்களால்தான் நல்ல திட்டம் வகுக்கப்படும்; காங்கிரசும் காங்கிரசுக்காரர்களும் தாம் பொறுப்பை உணர்ந்து வறுமையை எதிர்த்துப் போராடுவர்!" என்று.

நல்ல நம்பிக்கை ஏற்பட்டதால், நாடாளும் வாய்ப்பைப் பெற்றனர் பலர். கழுதையும் காங்கிரஸ் பெயரில் நின்றுல் கட்டாயம் வெல்லும் என்று காங்கிரசாரும் பெருமைப் பறை சாற்றிக்கொண்டனர். அத்துணை ஆனந்தமும் எக்காளமும் பொங்கி வழிந்தன காங்கிரசாரின் திருமுகங்களில். அந்தத் தொண்டர் குழாம் சட்ட மன்றமும் சென்றது; சிலர் மந்திரிகளுமாயினர்; வேறுசிலர் மந்திரிகளின் பாதந்தாங்கும் அடியார்களுமாயினர். சத்தியமூர்த்தி காலத்திற்குப்பின் சட்ட சபைச் சரித்திரத்தில் புதிய அத்தியாயங்களும் பொறுப்புள்ள காட்சிகளும் ஒளிவிடப் **போகின்றன என்றுதான் எண்ணினர்.**

எண்ணியபடியே எப்போதும் இருப்பதில்லை செயல்கள்.

மக்கள் குறைகளைக் களையச் சட்டமன்றம் சென்றோர், பதவிகளுக்குப் போட்டியிடுகின்றனர்!

மக்கள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டிய வசதிகளை ஒரு சிலருக்கே ஆக்கும் சதித் திட்டத்தில் ஈடுபடுகின்றனர்!

மேலாக, காலையில் படிக்காசு வாங்கக் கையெழுத்துப் போடத் தவருது வரும் சட்டமன்ற உறுப்பினர் பெரும்பாலோர், முக்கியமான பிரச்னைகள் ஆயப்படும் போதுகூடச் சட்ட மன்றிற்கு வருவதில்லை!

குற்றச் சாட்டுக்கள் பலப்பல இப்படிக் கொட்டுகின்றன சட்ட மன்றக் காங்கிரசுறுப்பினர்களை என்றுலும் காங்கிரசார் அவற்றைக் கண்டு அஞ்சவுமில்லை; அயரவுமில்லை.

"குற்றம் சொல்வோர் சொல்லட்டும்! நமக்குக் குதூகலம் மட்டும் கிடைக்கட்டும்!" என்ற போக்கிலேயே அன்னார் செல்ல அது இப்போது வெடித்துப் பல சிதறல்களை உருவாக்கியிருக்கிறது.

இந்தக் குற்றவாளிகளைக் கண்டிப்பதில் அடிக்கடி தன் வாயைத் திறக்க வேண்டியவராகிவிட்டார், பாராளும் மன்றத்து அவைத்தலைவர் அனந்தசயனம்.

"உறுப்பினர்கள் இங்கே வந்து குரட்டை விட்டு ஆனந்த சயனம் கொண்டாலும் சரி; கிரிக்கெட் புத்தகம் படித்தாலும் சரி; பிடித்து வைத்த பிள்ளையார்களாய்ப் பேசாதிருருந்தாலும் சரி; அவைக்கு வந்தால் போதுமே!"

"ஓட்டுப் போடும் போதுகூடவா, உறுப்பினர்களில்லை. வெட்கம்! வெட்கம்! ஓடி வாருங்கள்! ஓட்டுப் போடுங்கள்! மணியடித்துவிட்டேன்; காண்டீனிலிருந்தாலும் - கட்டிலில் கிடந்தாலும் ஓடி வாருங்கள்! எனதருமைக் காளைகளே, ஓடி வாருங்கள்! ஓடி வந்து ஓட்டளித்து உங்களுக்குப் பதவியளித்த காங்கிரசைக் காப்பாற்றுங்கள்! அழைக்கிறேன் காங்கிரஸ் சபா நாயகர் அனந்தசயனம்!"

"கோரம் இல்லாமல் மன்றமே அகோரமாய் இருக்கிறதே! மந்தை சென்றது எவ்வழியோ? எனதருமைத் தோழர்களே! இப்படிச் செய்தால் நான் என் போக்கில் கதவை இழுத்து மூடி விட்டுச் சென்றிடுவேன்! எச்சரிக்கை!"

"உங்களை நம்பிய வாக்காளரை இப்படியா ஏமாற்றுவது! 'நம் உறுப்பினர் நல்லன செய்வார்; நாட்டுக்கு உதவுவன காண்பார்! மந்திரியைக் காண்பார்; மண்டலம் ஆளும் தில்லி மகேசராம் மாமா நேருவைக் காண்பார்; துறைக்குத் துறை சென்று அலுவலரிடம் குறைகளைச் சொல்லிடுவர்! அழுத விழியும் தேம்பிய நெஞ்சமுமாய் அலையும் நம்மின் வாழ்க்கையை மாற்றிக் காட்டுவார்! நல்ல உறுப்பினர்; மிகுந்த பொறுப்பினர்' என்று ஆசைக் கனவுகள் கண்டுதானே அள்ளித் தந்தனர் வாக்குகளை? கொள்ளி வைக்கலாமா அந்த நம்பிக்கையில்? குமுருதா ஏழையர் நெஞ்சம், கூட்டத்திற்குக்கூட நீங்கள் வருவதில்லை என்றுல்?"

ஆயிரம் முறை அனந்தசயனம் இப்படிச் சொல்லியழுதும்-கொட்டி முடித்தும், பயனில்லையாம். கடந்த சின்னுள்களுக்குமுன் ஒரு நாள், அமைச்சர்கள்கூட சபைக்கு வரவில்லையாம். கையெழுத்துப் போட வந்திருந்த அமைச்சர்கள் கேள்வி நேரத்தில் இல்லையாம். உறுப்பினர்கள் தப்பித்தவறி மன்றத்திற்கு வந்து கேள்விக்கணைகளைத் தொடுத்தால் அங்கே அமைச்சர் பெருமக்கள் இருப்பதுகூட இல்லையாம் வினுவுக்கு விடையிறுக்க!

அன்று ஒரு உறுப்பினர் இருப்புப் பாதைத்துறை பற்றிக் கேள்வி எழுப்பினுராம்! பதில் சொல்ல எவரும் இல்லையாம்! ஆந்திரத்து அனந்தசயனம் ஆத்திரத்துடன் கோட்டாராம்: "அமைச்சர்கள் எங்கே? உறுப்பினர் வினுக்களைத் தொடுக்கையில்பதிலளிக்கக்கூடவா அமைச்சர்களைக் காணும்? பொறுப்பற்ற போக்கு! வெறுத்துவிட்டது நெஞ்சு, இதைக் கண்டு! எங்கே அமைச்சர்? எங்கே அமைச்சர்?"

அவர் இரைந்தபின் ஒருவர் எங்கிருந்தோ வந்து "என்ன கேள்வி? நான் சொல்கிறேன் பதில்!" என்றுராம்.

அனந்தசயனம் கேட்டாராம் "உன் துறையின் பெரிய அமைச்சர் எங்கே திரிகிறார்?" என்று. துணைமந்திரி சொன்னுராம், அவர் மாநில அவையில்பேசிக்கொண்டிருப்பதாக.

தப்பித்துவிட்டதாக எண்ணிக் கொண்டு சொல்லியிருக்கிறார் துணை மந்திரி. ஆனுல் அனந்தசயனத்தின் உருத்த விழியும் செய்தியைப் படித்த மக்கள் மன்றமும் இந்தக் கேள்வியைக் கேளாது போகாது; "தனது அமைச்சர் மாநில சபையில் பேசிக்கொண்டிருக்கிறார் என்றறிந்த துணை அமைச்சர் தன் இடத்தை விட்டு அகலாதிருந்திருக்க வேண்டுமே? கேள்வி கேட்கப்பட்டு மூக்கறுக்கப்பட்ட பின்பு ஓடிவருதல்தானு பொறுப்புள்ள துணை அமைச்சர்க்கு அழகு?"

துணை அமைச்சரின் பதில் யாதோ? மன்னன் எவ்வழியோ அவ்வழி மக்கள் என்பது பழமொழி! அனந்தசயனம் கண்டித்தார் முதலில், உறுப்பினர்களை. பின் மந்திரிகளையே கண்டிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டார்.

மாணவர்கள் பள்ளிக்கு வராமலிருப்பதும் தலைமை ஆசிரியர் அதை அறிந்து கதறுவதும் போன்ற நிலையைக் காட்டுகிறார் அனந்தசயனம்.

வகுப்பு மணி அடித்துவிட்டது. ஆசிரியரும் அறையில் இருக்கிறார். வகுப்பு நடக்கும் பாங்கைக் கண்காணிக்க வந்த தலைமை ஆசிரியருக்கோ அங்கிருந்த நிலை இடியாகிறது.

'மாணவர் பலரைக் காணுமே!" என்று அய்யுற்று பெயர்ப் பட்டியலை எடுத்துப் பார்த்துக் கூப்பிட்டார்.

"கந்தா!"

....

"கமலநாதன்!"

"............"

"கண்ணுயிரம்!"

....

"எங்கே போய்த் தொலைந்தனர் அத்தனை பேரும்? ஏன் சும்மா இருக்கே? சின்னச்சாமி! நீ சொல்."

"எல்லாரும் வெளியே போயிருக்காணுக. கந்தனுக்கு மண்டையடி; லீவு. கமலத்துக்கு கண் வலியாம்... அதனுலே..."

"இன்றே பார்க்க வேண்டிய 'மடுவில் மாண்டவ'னுக்குப் போயிட்டாணுக்கும்.! நீமட்டும் ஏண்டா வந்தே? நீயும் கிரிக்கட் மாட்சுக்குப் போறதுதானே! இதென்ன வகுப்பா, கரவியறையா? எல்லாப் பயலும் சேர்ந்து வெளியே போயிட்டா சுவருக்கா பாடம் நடத்துறது? உங்களை நம்பி அனுப்பித்த பெற்றோர்க்கு என்னடா சொல்வேன்? 'பள்ளிக்கூடத்துக்குப் போவான்; படிப்பான்; கெட்டிக்காரனு வருவான்; தனக்கும் குடும்பத்துக்கும் பெயரெடுத்துக் கெடுப்பான்; கண் நிறைந்த வாழ்வும், காது குளிரும் பெருமையும் காணலாம்!' என்றெல்லாம் எண்ணித்தானே, உங்களுக்கு அணிமணி பூட்டி அழகு பார்த்து, வண்ண உடை உடுத்தி வாசல்வரை வந்தனுப்புகின்றனர் நீங்கள் வரும் அழகையும் போகும் பாங்கையும் கண்டு கண்டு பெருமைப்படுகின்றனர். அந்த நம்பிக்கையிலேமண்ணைப் போடலாமா? நன்கு கற்றுத் திகழ வேண்டும் நாம் பெற்றெடுத்த பிள்ளை என்றுதானே உங்களைக் கண்ணீருக்கும் கவலைக்கும் ஊடே பள்ளிக்கு அனுப்புகின்றனர்! அந்த ஆசைக் கனவுகளிலே பிடி மணலை அள்ளிப் போட்டுவிட்டுத் துள்ளித் திரியலாமா? துடுக்காக ஓடலாமா, அடங்காது ஒடுங்காது! உங்கள் கடமையை மறந்த பின் உயர்வேது; வாழ்வது?"

மாணவர்க்ள் பெரும்பாலார் வகுப்புக்கு வரவில்லை என்றதும் சினம் கொண்ட தலைமை ஆசிரியர் இப்படித்தான் பேசினுர்.

ஐந்து ஆண்டுகளுக்குமுன் பள்ளியில் நான் கேட்ட அறிவுரை இது.

"சருமத்தை மிருதுவாக வைக்கக் கூடியதும், வதனத்தைப் பூப்போன்று மென்மையாக மலரச் செய்யக்கூடியதுமான நட்சத்திர சோப்பின் நுரையிலே குளித்துவிட்டு, பவுடர் மழையிலே சொக்கிவிட்டு, மாணவரணி பின்னே வர, அன்னுரின் கோல்ட் பிளேக் வாடை முன்னே வர நடந்து வரும் நடையே நடை; மற்றெல்லாம் நாகரிகத்திற்குத் தடையே தடை!" என்ற புதுமைத் தத்துவம் மனதில் ஊறத் தொடங்கிய காலத்தில் கிடைத்த அறிவுரை அது.

மாணவரைக் காணுமே என ஆசிரியர் திண்டாடும் இந்நிலையைத்தான் அண்மையில் எழுந்த அனந்தசயனம் அவர்களின் ஓலம் நினைவூட்டுகிறது. மாணவர்களின் எண்ணிக்கையை-வருகையைக் குறையாது பார்த்துக் கொள்ள வேண்டியவர் தலைமையாசிரியர், பள்ளியின் நலத்திற்காக.

— 10-ம் பக்கம் —

மூத்த மொழியின் இனிய சொற்கள்

ஆற்றோடு போயினவா? காற்றோடு கலந்தனவா?

'தன்னினம்-தன்நாடு-தன்மொழி, சிறப்பாகப் போற்றப்பட வேண்டும்' என்ற உணர்ச்சி மிக்குள்ள காலம் இக்காலம். இதே சூழ்நிலை பண்டையத் தமிழகத்தில் வேருன்றியிருந்தது. அதுபொழுது வேற்று மொழிச் சொற்கள் தமிழ் மொழியிற் கலக்கப்படவில்லை. அன்று தமிழ்மொழி தன்னேரிலாத் தனி மொழியாக அரசு செலுத்தியது. தமிழினம் தனித்து வாழ்ந்த காலமும் அதுதான்.

நாட் செல்லச் செல்ல, சூழ்நிலை மாறியது. தமிழன் பிற நாட்டாளுேடு தொடர்பு கொண்டான். பிற நாட்டானுக்குத் தன்னுடைய நாட்டில் தங்குவதற்கு இடங் கொடுத்தான். இடங் கொடுத்ததோடா நின்ருன்? எல்லா உரிமைகளையும் அளித்தான். இச்செயலே அவன் தாழ்வுக்குக் காரணமாய் அமைந்தது. மொழி தாழவும் ஏதுவாயிற்று. 'ஓண்ட வந்த மொழி ஊர் மொழியை ஓட்டியது.'

ஒவ்வொரு நாட்டிற்கும் தட்ப-வெப்ப நிலையில் மாறுதல் உண்டு. அதுபோலவே ஒவ்வொரு நாட்டுப் பண்பாட்டிற்கும் வேற்றுமை உண்டு. தமிழ்ப் பண்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டது ஆரியப் பண்பாடு. அது தமிழகத்தில் வளரத் தொடங்கியது. ஆரியப் பண்பிற்கு அடிமையானுன் தமிழன். 'ஆரிய மொழியைக் கற்பதே அழகு' எனக் கருதினுன். தன்னை மறந்தான்-தன்நாமங் கெட்டான். தலைப்பட்டான் ஆரியத்தைப் போற்ற. இதனுல் தமிழ்ப்பண்பு சிதைந்தது. தமிழ்மொழியும் மணிப் பிரவாள மொழியாயிற்று. மணிப்பிரவாள மொழியை மலையென மதித்தான். ஆரிய மொழியை உயிர் என்ருன்; அன்னை மொழியை உடலென்ருன். பெற்ற தாய்க்குக் கொடுக்க வேண்டிய சிறப்பை மற்றதற்கு வழங்கினுன். இந்நிலையைத் தமிழகத்தின் இடைக்காலமென்டர்.

பின்னர் சிறிது சிறிதாகத் தன்னிலையை உணரத் தொடங்கினுன். தான் அடிமைப்பட்டிருப்பதை அறிந்தான். தன்மொழி சிதைக்கப்படுதலையும் தெளிந்தான். இன்று ஓரளவு வளர்ச்சி அடைந்து வருகிருன். முழு வளர்ச்சியையும் அடைய வேண்டுமானுல், தந்நாட்டின் தன்மையையும்; மொழியின் இயல்பையும் ஒவ்வொருவரும் உணர்ந்தாக வேண்டும். உணர்ந்தால் மட்டும் நன்மை ஏற்படும் என்று எண்ண இடமில்லை. தன் மானத்தைக் காப்பவனுகவும் இருக்கவேண்டும். தன்மானத்தைக் காக்குந் தனிக் குணமில்லாத நிலையே தமிழன் தாழ்வதற்குக் காரணமாயிற்று.

'இன்று தமிழ் ஆட்சி மொழி ஆக்கப்பட்டுள்ளது' என்று அரசினர் கூறுகின்றனர். மற்றவர்களுமிதை உணர்ந்திருப்பர். ஒருமொழி ஆட்சிப் பீடம் ஏறுவதால் மட்டும் உயர்ந்துவிடாது. அதுவும் தமிழ் மொழி உயர்வடைய வாய்ப்பேயில்லை. இதனுல் மணிப்பிரவாள நடையும் மங்கிவிடாது. இந்த 'மணிப்பிரவாளம்' என்ற பேய், ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களை உண்டு ஏப்பம் விட்டிருக்கிறது. இதனுல் மறைந்த தமிழ்ச் சொற்களும் ஏராளம். வேற்று மொழிச் சொற்களை ஓட்ட வேண்டுமானுல், அதற்குத் தகுந்த தமிழ்ச் சொற்களைக் காட்டியாக வேண்டும். காட்டுவதால் மட்டும் வேற்று மொழி மறைந்துவிடாது. தமிழ்ச் சொற்களை நடை முறைக்குக் கொண்டு வர வேண்டும். நடைமுறைக்குக் கொண்டு வருவதில் சில பல இடையூறுகள் இருக்கலாம். அதைப் பொருட்படுத்தாது நாம் செய்யும் பணியில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

தமிழ் மொழியிலே வல்ல புலவர் பெருமக்களும், தமிழ்ப் புலமையுடன் மற்ற மொழிப் புலமையும் நிரம்பிய அறிஞர் பெருமக்களும்-மொழி வளர்ச்சியிற் பெரிதும் பங்கு கொள்ள வேண்டும். உலக வழக்கையும் இலக்கிய வழக்கையுமுணர்ந்து, ஒன்றுமேயறியாத பாமர மக்களுக்கு முணர்த்த வேண்டும். 'கட்டுரை-கதை-கவிதை வாயிலாகவோ அல்லது சொற்பொழிவு மூலமாகவோ தங்கள் பணியை மேற்கொண்டால்மட்டும், வேற்று மொழிச் சொற்கள் மறைந்துவிடும்' என்று கருதுவது தவறு. செயல் மூலமாகவும் பணியாற்ற உறுதி கொள்ள வேண்டும். இங்கு செயலென்று குறிப்பிடுவது, 'தாங்கள் செய்யும் செயலில்' என்பதல்ல பொருள். மக்கள் செய்யுஞ் செயலிலும் ஒன்றித் தங்கள் வினையைப் புகுத்த வேண்டும். 'தமிழ்ச் சொற்கள் புகவேண்டும்; புகவேண்டும்' என்று எழுதுவதாலும், சொல்லுவதாலும் பயன் ஏற்படப் போவதில்லை. 'தமிழ்ச் சொற்களைப் புகுத்த வேண்டும்' என்று ஒவ்வொருவரும் உறுதியெடுத்துக் கொண்டால்தான், வேற்று மொழிச் சொற்கள் நாட்டை விட்டகலும். புகுத்துவதென்பது அரிய வினைதான். இருப்பினும் தளராது தொண்டு செய்ய உறுதியும் ஊக்கமும் கொள்ள வேண்டும். எப்பொழுதுஞ் சொல்லும் சொல்லுக்குக் 'காலம்' வேண்டியதில்லை. ஆனுல் செயலுக்குக் காலம் வேண்டும். இன்றையத் தமிழகத்தின் விழிப்பான நிலை, அவரவர் செய்யுந் தமிழ்ப் பணிக்கு ஏற்றதெனக் கொள்ளலாம். இவண் விரிவாகுங் கட்டுரை, சில தமிழ்ச் சொற்களை வழக்காற்றுக்குக் கொண்டு வர எண்ணி எழுந்ததாகும்.

பெரிய நகர்ப்புறங்களில் வீதிகள் வழியே செல்லும்பொழுது, தமிழ் எழுத்துக்களிலும்-வேற்று மொழிச் சொற்களிலும் எழுதப்பட்டுத் தொங்க விடப்பட்ட சில பல விளம்பரப் பலகைகளைக் காண்கின்ருேம். வேற்று மொழிச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களில் எழுதி மாட்டப்பட்டிருக்கும் பலகைகள்தான் மிகுதியாக உள்ளன. இதைவிட மொழிக்குக் கேடு வேறென்றுமிருக்கமுடியாது.

ஊரைவிட்டு நகருக்கு அலுவலாகச் செல்லும் மக்களும், நகர் விட்டு நகருக்கு வேலையாகச் செல்லும் மக்களும், உண்ணவும்-அலுவல் முடியும்வரை உறையவும் விடுதிகளை நாடுகின்றனர். செல்லும் மக்கள் தங்கள் பொருள் நிலைக்கேற்ப விடுதிகளைத் தேடித் தங்குகின்றனர். அவ்விடுதிகளை விளம்பரப்படுத்தும் பலகைகளை யாவரும் ஊன்றி கவனித்தால் பல நன்மைகள் தமிழ் மொழிக்கு ஏற்பட வாய்ப்புண்டு. ஒரு எடுத்துக் காட்டைமட்டும் காட்ட விழைகின்றேன்.

"Murugan Vilas Hotel—Boarding and Lodging", என்று ஆங்கிலத்திலும், இதை அப்படியே தமிழ் எழுத்துக்களில், "முருகன் விலாஸ் ஹோட்டல்—போர்டிங் அண்டு லாட்ஜிங்" என்றும் எழுதப்பட்டிருந்தது ஒரு விடுதியில். அவ்விடுதிப் பொறுப்பாளரிடம், 'நல்ல தமிழ்ச் சொற்களிருக்கும் பொழுது ஏன் ஆங்கிலச் சொற்களைப் பலகையில் பொறித்துள்ளீர்கள்?' என வினவினேன். அதற்கவர், 'இதனுல் தவறு ஒன்றும் நேர்ந்துவிடவில்லையே' என்ருர். 'தவறு நேரவில்லையா? தாய் மொழியாம் தமிழை மதியாது வேற்று மொழியில் எழுதியது முதற் தவறு. அவ்வேற்று மொழிச் சொற்களை அப்படியே தமிழ் எழுத்துக்களில் எழுதியிருப்பது இரண்டாவது தவறு. தவறுமட்டுமா? தமிழ்மொழியையே அவமதித்ததாகவுங் கருதப்படும்' என்றேன்.

'இதற்கேற்ற தமிழ்ச் சொற்களை உம்மால் கூறமுடியுமா?' என்ருர். 'கூறமுடியுமாவா. கூறுவதற்குத் தானே யான் வந்துள்ளேன்' என்றேன். 'அங்ஙனமெனிற் சொல்' லென்ருர்.

"முருகன் உணவு விடுதி"
(உண்டியும்-உறையுளும்)

எனக் கூறினேன். 'அழகாகத் தானிருக்கிறது. தாங்கள் மறு தடவை வரும்பொழுது இப்பலகை இங்கிருக்காது. அதற்குப் பதிலாகத் தமிழ்ப் பெயர் தாங்கிய பலகையிருக்கும்' என்ருர். யான் மகிழ்வுடன் திரும்பினேன்.

"வேற்று மொழிமீது மோகங் கொண்ட சிலர், ஆங்கிலத்தில் அல்லது ஆரியத்தில் எழுதினுல் என்ன கெட்டுவிடும்?" என வினவுகின்றனர். இவர்கள் உள்ளத்தை இனிமையெனும் தமிழ்த் தேன் தொடும்படி எடுத்துரைப்பது நம்போன்ருேர் கடமைகளில் தலையாயதாகும்.

நகர்த் தெருக்கள் வழியே இன்னொரு பக்கம் பார்த்தால், 'முடி அலங்கார நிலையம்' என்றும், மற்றொரு புறம் 'Barbar Shop' என்று ஆங்கிலத்திலும், 'பார்பர் ஷாப்' என்று தமிழ் எழுத்துக்களிலும், வேறொரு பக்கம் 'Hair Cutting Saloon' என்று ஆங்கிலத்திலும், 'ஹேர் கட்டிங் சலூன்' என்று தமிழ் எழுத்துக்களிலும் எழுதப்பட்டிருந்தது. கண்டு வேதனையோடு சென்றேன். சென்றதும், மேலே குறிப்பிட்ட மூன்று மனை அன்பர்களுக்கும் அஞ்சல் எழுதினேன்.

'தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்து வாழும் தகைமையாளரே! யான் இங்கு கூற விழையுங் கருத்துக்கு மதிப்புத் தருவீரெனக் கருதியே இம்மடல் வரைகின்றேன். தங்கள் பொறுப்பில் நடைபெறும், மயிர் கத்தரிக்கும் மனையினை விளம்பரப் படுத்தும் பலகையைக் கண்ணுற்றேன். அதில் 'முடி அலங்கார நிலையம்' என்று எழுதப்பட்டுள்ளது. இதன் பொருளென்னவென்பதை முதலில் காண வேண்டும்! 'முடி' என்பது தலையிற் கவிக்கப்படுமொரு அணியின் பெயர்.

'முடியுடை வேந்தர் மூவருங் கூடி' என இலக்கியங்களும் இதைப் புலப்படுத்துகின்றன. 'முடி' என்பது தலையிலுள்ள மயிரை ஒருக்காலுங் குறிக்காது கயிற்றிலே முடியப்படும் முடியை வேண்டுமானுல் குறிப்பிடலாம். 'அலங்காரம்' என்ருல் 'அணி' அல்லது 'அழகு' என்று பொருள். 'நிலையம்' என்பதை 'இடம்' எனக் கொள்ளலாம் எனவே, 'முடி அழகு செய்யும் இடம்' என விரியும். தட்டார் அதாவது பொன் வேலை செய்வோரல்லவா முடியை அழகு செய்வர். அத்தொழிலைத் தாங்கள் செய்தால் எழுதியுள்ள இப்பெயர் பொருந்தும். அதுவும், தமிழும் வடமொழியுங் கலந்திருக்கிறது. எனவே, தாங்கள் மேற்கொண்ட தொழிலுக்கும் இதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. அமாவாசையும் அப்துல் காதரும்போல: பொருத்தமில்லாத பெயரை எழுதலாமா? இனியாவது உணர்ந்து திருந்துவீர்களா?

'மயிர் மழிமனை' என்று எழுதினுல் எவ்வளவு அழகாகவிருக்கும். இத்தொடரின் மோனை அழகே முடிவு நாள் வரையிலுஞ் சோறிடும். இச்சொல்லை வள்ளுவர் தமது குறளில் பொறித்துள்ளார்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம் பழித்த தொழித்துவிடின் (குறள் 28) என்பது அக்குறள் வெண்பா. 'மழித்தல் என்ருல் 'மொட்டையடித்தல்' என்றல்லவா பொருள். இப்பெயருக்கு எப்படிப் பொருந்துமென்று தாங்கள் கேட்கலாம். அதற்கும் விளக்கம் சொல்லி விடுகிறேன். இக்குறளுக்கு உரை விளக்கந் தந்த பரிமேலழகர், 'பறித்தலும் மழித்தலுள் அடங்கும்' என்று கூறுகிருர். 'மயிரை அழகு பொருந்தக் கத்தரிப்பதும் மழித்தலுள் அடங்கும்' என நாமும் கூற முடியும்.

தங்கள் மனைக்கு அருகிலுள்ள, 'பார்பர் ஷாப்' உரிமையாளருக்கும், 'ஹேர்கட்டிங் சலூன்' உரிமையாளருக்கும், இவ்விளக்கம் அமைந்த தனித்தனி இதழ்கள் அனுப்பியுள்ளேன். அவற்றை அவர்களிடம் கொடுத்துத் தாங்களும் இதுபற்றிச் சொல்ல வேண்டுகிறேன்.' என்ற கடிதத்தை அனுப்பியிருந்தேன். யான் கடிதமெழுதிய் மறுவாரமே, மூவரிடத்திலிருந்தும் எனக்குப் பதில் வந்திருந்தது.

— 9-ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 5 ‖ 28—3—59 ‖ இதழ் 41

அழுகல் வரி

★

பிறப்புவரி, பெற்றெடுத்த மகற்குவரி,
பிறந்தவர்கள் இறந்து போனால்
இறப்புவரி, பொருளிடையே இருப்பவர்க்குச்
சொத்துவரி, ஈடு பட்டுச்
சிறப்புடைய தொழில்புரிவார் செலுத்தும்வரி,
சீனிவரி, உழவு செய்தார்
அறுப்பதற்கும் வரிப்போட்டார் அதற்குமொரு
புதுக்கதையை ஆய்ந்து சொன்னார்.

"ஒப்பரிய விடுதலையால் ஓடிவரும்
சுகவாழ்க்கை; உலகம் போற்றும்
செப்பரிய புதுமையெலாம் தேடிவரும்;
நெற்குவியல் தெருக்கள் தோறும்
எப்பொழுதும் குவிந்திருக்கும்; ஏழைகளின்
மாடியிலே இன்பம் பொங்கும்"
இப்படியே பொய்யுரைத்தார் காய்கறிக்கும்
வரிப்போட்டார்; இளைக்க வைத்தார்.

அண்டமுழு தாய்ந்தாலும் அழுகலுக்கு
வரிபோட்டே அழ வைத்தாரை(க்)
கண்டதில்லை தென்னாட்டில் காளைகளின்
தேர்தலுக்கே கட்சி வைத்தோர்
பண்டொருவர் படைக்காத புதுமையெல்லாம்
வரித்துறையில் படைக்கின்றார் காண்!
துண்டுபடத் துவண்டுவிழும் ஏழையர்க்கும்
இவரேதான் துணைவராம்! சீ!

வாழ்க்கைவளம் அழிவதற்கோ வரிகொடுத்தே
இளைப்பதற்கோ மக்கள் ஆட்சி!
பாழ்மனத்துப் பாவிகளின் பசிதீர்க்கும்
ஒற்றுமையோ பாரதப் பேர்!
வீழ்ந்திருக்கும் சமுதாயம் மென்மேலும்
வீழ்வதற்கோ காளை மாட்டை(த்)
தேர்ந்தெடுக்கக் கோருகிறார் ஏழையரே!
காளைகளின் திமிர றுப்பீர்!

★

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

மனப்பான்மை வருகிறது! ஒரே மேடையில் உலகக் கம்யூனிஸ்ட் தலைவர்களையெல்லாம் கண்டுகளித்த தமிழ்நாட்டுத் தனிப் பெருந் தலைவரும், தாயகத்தின் விடுதலைத் தளபதியுமான எம். ஆர் வெங்கட்டராமன் அவர்கள் தன்பின்னே அணிவகுத்து நிற்கும் பெரியதோர் காம்ரேட் பட்டாளத்தின் சந்தேகங்களுக்கு - நாசரைக் கண்டிக்கும் குருஷ்சேவின் காருண்ய குண நலன்களுக்கு என்ன விளக்கம் அல்லது சமாதானம் சொல்லப் போகிறார்? அடுத்த கிழமை சந்திக்கப் போகும் தமிழ் மாகாணக் கமிட்டி உறுப்பினர்கள் சுய சிந்தனையுடன் விவாதிக்க அனுமதிக்கப்படுவார்களா?

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் என்றால் மாஸ்கோ மாடல் பொம்மலாட்டக் குழுவினர்தான்! காரணம் ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியும் அகில உலக அமைப்பான காமிண்டனும் வெளிநாட்டுக் கம்யூனிஸ்ட்களையெல்லாம் கடிவாளம் போட்டுப் பிடித்துக் கொள்ளும் முறையிலே அமைக்கப்பட்டுள்ளன! புரட்சியில் வெற்றி கண்ட லெனின், கட்சி அதிகாரம் என்ற பெயரால் கயவர்களும் கயவாளிகளும் மக்களின் நலன் பேணாதவர்களும் இடம் தேடுவதைக் கண்டித்துள்ள இந்தியக் கம்யூனிஸ்ட்கள் மாற்றுக்கட்சிகளிலே லாயக்கற்றவர்கள் என்று விரட்டப்படுவர்களையெல்லாம் வெற்றி வீரர்கள் என்று தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டு வீண் விளம்பரம் தருவார்கள்! ஆனால் இவர்களின் கருணைக் கடவுள் லெனின் காட்டும் வழி-கம்யூனிஸ்ட்களின் கவனத்துக்கு வர வேண்டிய வழியாகும்! **"ராஸ்கல்களையும், எதேச்சாதிகாரிகளையும், உண்மையற்ற அல்லது ஊசலாடிக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட்களையும், முகத்திற்கு முலாம் பூசிக்கொண்டு, உள்ளத்திலே பழங்கொள்கையையே கொண்டிருக்கும் மென்ஷிவிக்குகளையும் கட்சியிலிருந்து வடிகட்டி எடுத்துவிடவேண்டும்"** என்பதாக 1921-ல் எழுதி வைத்திருக்கிறார்! மார்க்கிசம்-லெனினிசம் பேசும் கம்யூனிஸ்ட் கட்சியினர் கொள்கையை விற்றாகிலும் கொடி பிடித்தால் போதும் என்று முதுகிலே தட்டிக் கொடுத்தார்கள்!

இப்படி எத்தனையோ செய்திகளில் இந்தியக் காம்ரேடுகள் பிடிபட்டுக்கொள்கிறார்கள்! மாஸ்கோவின் 20வது மாநாட்டில் குருஷ்சேவ் ஸ்டாலின் கொடுமைகளைப் பற்றிச் சொன்னார். படங்கள் உடைபட்டன. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் பகிரங்கமாக உடைக்கவில்லை. வீட்டுக்குள்ளேயே அந்த நல்ல காரியத்தைச் செய்திருக்கவேண்டும்! குருஷ்சேவ் சொன்ன செய்திகளுக்கு வலிவூட்டும் வரையில், துவக்க காலத்தில் லெனின் உயிரோடு இருந்தபோது, ஸ்டாலினைப் பற்றிச் சொல்லியிருக்கும் - கருத்துக்கள், ஸ்டாலின் அதிகார போதையில் எதையும் செய்திருக்கமுடியும் என்றுதான் நம்பவேண்டியுள்ளது.

1923 ஜனவரியில் லெனின் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். உடல் நலமின்றியிருந்த காலத்தில் 1924ம் ஆண்டில் லெனின் இறப்பதற்கு முன்னால் எழுதப்பட்டதாகும்! - **"தோழர் ஸ்டாலின் பொதுக்காரியதரிசியாக இருந்து அதிகாரம் அனைத்தையும் தன் கைக்குள்ளே அடக்கிக்கொண்டார். இந்த அதிகாரத்தைப் போதிய எச்சரிக்கையோடு உபயோகப்படுத்த அவருக்கு எப்பொழுதும் தெரியும் என்று நான் நம்பவில்லை. ஸ்டாலின் ரெம்பவும் மூர்க்கமான ஆசாமி. கம்யூனிஸ்ட்களாகிய நமக்குள் இது ஒத்துப்போகும். இருந்தாலும் பொதுக்காரியதரிசி என்ற பொறுப்பில் இது ஆதரிக்க முடியாத கொள்கையாகும். ஆகையால் ஸ்டாலினை நீக்கிவிட்டு அவருடைய பதவியில், ஸ்டாலினுக்குஎல்லா விதத்திலும் வேறுபட்ட, அதாவது உயர்தரத்தில் பொதுவாக அதிகப் பொறுமையுள்ளவராகவும், அதிக விசுவாசமுள்ளவராகவும், அதிக அடக்கமுள்ளவராகவும், தோழர்களுக்கு செவிசாய்க்கக்கூடியவராகவும், நிலையான புத்தியுள்ளவராகவும், உள்ள வேறு ஒரு ஆளைத் தேர்ந்தெடுக்கும்படி, தோழர்களுக்குநான் ஆலோசனை கூறுகிறேன்"** - (பக்கம் 47, திலக் எழுதிய புத்தகம், "காமின்டன் எழுச்சியும் வீழ்ச்சியும்") ஸ்டாலின் பஜனை செய்வதையே தங்கள் பிறவியின் பெரும்பணியாக எண்ணியிருந்த உலகத்துக் கம்யூனிஸ்ட்கள்எல்லாம் மாவீரன் லெனின் கூறிய மணிமொழிகளை மறைத்தே வைத்துவிட்டார்கள்! ஸ்டாலினிஸ்ட்கள் வகுத்துத் தந்த பாதையிலே தான் குருஷ்சேவ் தன் படை நடத்துகிறார். சர்வாதிகாரம் சாய்க்கப்படவேண்டும் 'என்ற நியதிகளுக்குப் புறம்பாக வெளிநாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்குக் கட்டளை பிறப்பிக்கிறார். சோவியத் தலைவர்களுக்குள்ள தொத்து வியாதி எல்லாக் கம்யூனிஸ்ட்களையும் பீடித்துள்ளது. வெறிக்கு இரையாக்கி வருகிறது! குருஷ்சேவ்-நாசர் மோதுதல், கெய்ரோ - மாஸ்கோ போராட்டமாகிவிட்டது! வாஷிங்டனும் - லண்டனும் கூர்ந்து கவனிக்க வேண்டிய காட்சிகள்! புதுடில்லி - சென்னைக் கம்யூனிஸ்ட்கள் புதிய பாடங்கள் பெற வேண்டிய நிகழ்ச்சிகள் இவை.

—கூடலரசன்

திருத்தம்

கடந்த இதழில் "நாசர் பாடம்" எனும் கவிதையில் 26-ம் வரியில் "தமிழ் மக்காள்" என்றிருப்பதை "தமிழ மக்காள்" எனத் திருத்திக்கொள்க.

5. எழுசீர் விருத்தம்.

**பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?**

இறுதி நாள் : 4-4-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

சிவகெங்கைச் சீமை

காட்சிகள்



வசனத் துளிகள்

கொழுந்தனுக்கு மணம் என்றதும் கொள்ளை இன்பத்துடன் குத்துவிளக்கைத் தாண்டிவிடும் குலவிளக்கு கண்ணுத்தாள்.

மேகத்திடை வரும் கீற்று மதிபோல், சோகத்திடை வரும் சிறு முறுவல். பாஞ்சையை மீட்க, சிவகெங்கை உதவி கிடைக்கும் என்ற சேதி விளைத்த தோற்றம்.

"கழுகு விழிகளுக்குத் தப்பிக் கம்பளத்தான் வாழ்ந்திட முடியுமா ?" எனக் கர்ஜிக்கும் மேஜர் வெல்ஷ்.

"எவனடா வருகிறவன் ? வாருங்கள் இங்கே! தானுபதி தலையைப் பாலாவிலே சொருகி நீங்கள் கொண்டு வந்ததுபோல், உங்கள் வெள்ளைத்தலைகளை இந்த வேலிலே சொருகி நகர்வலம் வருகிறேன்! வெல்ஷ் துரை வருகிறா ? இல்லை, மார்ட்டின் துரை வருகிறா ?"

மருதரசர்கள் சிறைப்பட்டுவிட்டனர். மரணம் முத்தழகைக் கொத்தத் துடிக்கிறது. அப்போது தான், காதலிக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக மணக்கோலம் பூண்டு அவள் கை பிடிக்கிறான். சாவும் வாழ்வும் பக்கம் பக்கம் நின்று சதிராடும் காட்சி இது.

சேவகி

தென்னரசு

அன்புள்ள சகோதரி,

நலம். டேராடூன் முகாமிலிருந்து அடுத்த வாரம் கல்கத்தா முகாமிற்குச் செல்ல இருக்கிறேன். இன்னும் ஒரு திங்களில் எனக்கு ஓய்வு ஆரம்பமாக இருக்கிறது. ஓய்வைக் கழிக்க நான் ஊருக்கு வரும்போது, உன்னுடைய எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் ஒரு அற்புதமான ஏற்பாட்டுடன் வருகிறேன்.

சுலோச்சனா, கஷ்டப்பட்டு நான் உன்னை டாக்டருக்குப் படிக்க வைத்தேன். படித்தாய். பட்டம் பெற்றதோடுமட்டுமல்லாமல் அந்தத் தொழிலில் பேரும் புகழும் எய்திவிட்டாய். நான் கொடுத்து வைத்தவன். இவ்வளவு கீர்த்தியுடன் வாழும் உனக்கு, அதற்கேற்ற அந்தஸ்தும, படிப்பும் பெற்ற கணவன் அகப்படுவானா என்று அடிக்கடி நான் கவலைப்பட்டதுண்டு. அந்தத் துயரம் இப்போது இல்லை எனக்கு மைத்துனர் கிடைத்துவிட்டார். ஆற்றலில், அறிவில், புகழில் உன்னோடு போட்டி போட்டுக்கொண்டிருப்பவர், எனக்கு மைத்துனராக வரப்போகிறார் என்பதை எண்ணி, கடந்தஇரண்டுவாரங்களாக அளவு கடந்த குதூகலத்தில் மிதக்கிறேன். இயற்கை எழில் நிறைந்த டேராடூன் பகுதியில் வாழும் எந்தத் தமிழனும் இன்பமாய் இருந்ததில்லை. அமைதி அவனுக்குக் கிடைக்காது. ஆயிரம், இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் மனைவி, மக்களை வைத்துவிட்டுத் தனிமையில் இருந்து வெண்ணிலவைப் பார்த்தாலென்ன, வெள்ளிப் பனிமலையைக் கண்டாலென்ன! நிலவு அவனுக்கு நெருப்பு! மலை அவனுக்குப் பூதம்! ஆனால் கடந்த இரண்டு வாரங்களாக மட்டும் நான் கவலையற்று வாழ்கிறேன்.

உனக்குக் கிடைத்திருக்கும் மாப்பிள்ளை, கோவை மாவட்டத்திலுள்ள தாராபுரத்தைச் சேர்ந்தவர். கல்கத்தா ராணுவ முகாமில் தலைமை டாக்டராகப் பணி புரிகிறார். சின்ன வயதில் அவர் உத்தியோக உயர்வு பெற்றதற்கு அவரது குணமும், திறமையுமே ஒத்துழைத்தன.

நான் ஊருக்கு வரும்போது ரவீந்திரனும் தாராபுரத்திற்கு வருகிறார். ரவீந்திரன் தான் மைத்துனரின் பெயர். இந்த ஓய்விலேயே திருமணத்தை முடித்துவிட எண்ணம். கவலை ஒழி! வாழ்வைத் தொடங்கப் போகிறாய், பரபரப்பையும், குழப்பங்களையும் ஒதுக்கிவிட்டு நல்ல முடிவுடன் இரு!

உன் அண்ணன்,
துரைராஜ்.

—சுலோச்சனா கடிதத்தைப் படித்தாள். துரைராஜ் எதிர்பார்க்கும் ஆரவாரமான மகிழ்ச்சியை, சுலோச்சனாவுக்கு அந்தக் கடிதம் தரவில்லை. துரையிடமிருந்து. அதிருப்தியைத் தரக்கூடிய கடிதமாக வந்தது அது தான் முதல் தடவை. சுலோச்சனாவின் முகம் சிவந்தது. மெல்லிய வெள்ளைப் புடவையால், துளிர்த்து நின்ற நெற்றி வியர்வையை துடைத்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்தாள். எதிரே இருந்த பிரபல எழுத்தாளனான மலர்மன்னன் படத்தை அவள் கூர்ந்து பார்த்தாள். அவன் கண்ணெதிரே அமர்ந்து கனிவுடன் நோக்குவதைப்போலவே அவளுக்குப் பட்டது. சுலோச்சனா எழுந்து போய், அந்தப் படத்தைக் கழட்டித் துடைத்து மறுபடியும் மாட்டிவிட்டு நாற்காலிக்கு வந்தாள்.

அரும்பி நின்ற கண்ணீரைத் துடைத்துவிட்டு, மேசையிலிருந்த நாவல் புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள். தென்னாட்டின் புகழ்பெற்ற வாலிப எழுத்தாளனும், சுலோச்சனாவின் அன்பிற்குரியவனுமான மலர்மன்னன் எழுதிய உன்னதமான வரலாற்று நாவல் அது. அவன் எழுதிய புத்தகம் ஒன்றைக்கூட சுலோச்சனா படிக்காமல் விட்டதில்லை.

சுலோச்சனாவின் பல துயரங்களை அந்த இளைஞனின் கவிநயம் மிகுந்த சொல்லோட்டம் மாற்றியிருக்கிறது. ஊரிலே இருக்கும் நோயாளிகளுக்கெல்லாம் மருந்து கொடுத்து ஊக்கமூட்டிய சுலோச்சனாவுக்கு, அவளுடைய துயரத்தை நீக்க அந்த எழுத்தாளனின் படைப்புகளே மூலிகைகளாக இருந்தன. வேறு மருந்தை அவள் விரும்பவில்லை.

ஆனால், டேராடூனிலிருந்து வந்த கடிதத்தால் விளைந்த தீவினையை, அவளுடைய இதயங் கவர்ந்த எழுத்தாளனின் எந்தப் படைப்பாலும் அழிக்க முடியவில்லை. வழக்கம் போல், கவலையை மறைப்பதற்கு, அந்த நாவலை எடுத்து மடியில் விரித்தாள்; அவளையும் அறியாமல் கண்ணீர் உதிர்ந்தது.

பிடித்தமான நாவல் கையில்—அந்த நாவலைத் தீட்டியவனின் எழிலான தோற்றம் எதிரில்—அறிந்தோ அறியாமலோ, அந்த நாவலாசிரியனை மறந்துவிட வேண்டுமென்ற அன்புக் கட்டளையை ஏந்தி வந்திருக்கும் அண்ணனின் கடிதம் அருகில்! சுலோச்சனா, நாவலை மூடி, மேசையில் போட்டுவிட்டு, சோர்ந்து சாய்ந்தாள்.

★

டாக்டர் ரவீந்திரன், புகழ்பெற்ற ஒரு லேடி டாக்டரை மணந்து கொள்ளப்போகிறோம் என்ற பூரிப்புடன் தாராபுரத்திற்கு வந்திருந்தார். மதுரைக்குப் போய், தங்கையின் புகைப்படத்தை அனுப்புவதாகச் சொல்லிச் சென்ற துரையின் கடிதத்தை ஒவ்வொரு நாளும் அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பத்து நாட்களுக்குப் பிறகு மதுரையிலிருந்து கடிதம் ஒன்று வந்தது.

அன்புள்ள டாக்டருக்கு,

நீங்கள் மதுரையில், லேடிடாக்டர் சுலோச்சனாவைத் திருமணம் செய்து கொள்ளப்போவதாகக் கேள்விப்பட்டேன். நான் ஒரு மாஜி ராணுவத்தினன் என்ற முறையில், ஒரு ரகசியத்தை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். டாக்டர் சுலோச்சனாவுக்குக் கடந்த ஓராண்டு காலமாகக் காசநோய் பிடித்திருக்கிறது. இது நான் அருகிலிருந்து கண்ட உண்மை. ஆபத்தைத் தவிர்த்துக்கொள்ள ஆவன செய்துகொள்ளுங்கள்!

மாஜி ராணுவ ஊழியன்
மணவாவன்

ரவீந்திரனுக்குத் தலைசுற்றியது. கிறு கிறுத்துப் போய் படுக்கையில் சாய்ந்தான்.

அன்புள்ள துரை அவர்களுக்கு,

தங்களுடைய விருப்பப்படி, திருமதி சுலோச்சனாவை மணம் முடித்துக் கொள்ள இயலாமைக்கு மன்னிக்கவும். மனநிலை சரியில்லை. இன்று இரவு கல்கத்தாவுக்கு பயணப்படுகிறேன்.

அன்புள்ள
ரவீந்திரன்

துரைக்கு, இப்படி ஒரு கடிதத்தை எழுதிவிட்டு ரவீந்தர் கல்கத்தா பயணமானான்.

★

கல்கத்தாவில் ரவீந்தர் அமைதி காணமுடியாமல் தவித்தான். தெருவில் போகும் பெண்களெல்லாம் காசநோய் பிடித்தவர்களாகவே அவனுக்குப் பட்டனர்.

மன அமைதிக்காக ஆடம்பரமான உணவு விடுதி ஒன்றில் தங்கி ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் பொழுதைப் போக்கினான் ரவீந்திரன்.

ஒரு நாள் அந்த விடுதியில் தமிழகத்தின் தலை சிறந்த நாவலாசிரியர் "மலர்மன்னனு"க்கு கல்கத்தா வாழ் தமிழர்களின் சார்பில் ஒரு வரவேற்பு நடைபெற்றது. விடுதியின் மாடத்தினின்று அந்த விழா நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ரவீந்தருக்கு, எழுத்தாளர் **'மலர்மன்னன்'** எங்கோ பார்த்த உருவமாக இருந்தது. நெடு நேர யோசனைக்குப்பின் தன்னுடன் படித்த 'கோமதி நாயகம் தான், மலர்மன்னனாக' மாறியிருக்கிறான் என்பதை உணர்ந்தான் ரவீந்திரன்.

விழா முடிந்து மலர்மன்னன் பந்தலை விட்டு வெளியில் வந்ததும், ரவீந்திரன் தன்னை அவனிடம் அறிமுகம் செய்துகொண்டான். மலர்மன்னன் அவனைக் கட்டித் தழுவி, மாணவப் பருவக் குறும்புகளையெல்லாம் நினைவூட்டினான். இருவரும் முழக்கமிட்டுச் சிரித்தார்கள்.

"ரவீந்தர், திருமணம் எப்போது? நடந்துவிட்டதோ?-என்று கேட்டார் மலர்மன்னன்."

"இல்லை; அடுத்த ஆண்டு... உனக்கு எப்போது?" பதிலுக்குக் கேட்டான் ரவீந்தர்.

"அடுத்த திங்களில் நடைபெறும். நீ, அவசியம் வர வேண்டும்" என்றான் மலர்மன்னன்.

"பெண் எங்கே?"-ரவீந்தர்.

"ஒரு லேடி டாக்டர்! மதுரை அவள் ஊர்!" அடக்கமாகச் சொன்னான் மலர்மன்னன்.

"லேடி டாக்டரா! பெயர் சுலோச்சனாவா?" என்று அதிர்ச்சியோடு கேட்டான் ரவீந்தர்.

"ஆமாம்; ஏன்?"

"மன்னிக்க வேண்டும் மலர்மன்னன்! அவளுக்குக் காசம்! இதோ கடிதம்" என்று கூறி, தனக்கு மாஜி ராணுவ ஊழியர் எழுதிய கடிதத்தை மலர்மன்னனிடம் கொடுத்தான் ரவீந்தர்.

மலர்மன்னனுக்குக்கண்கலங்கியது.

நாவலாசிரியர் மலர்மன்னனை மணம் முடித்துக் கொள்ள சுலோச்சனா துடித்தாள். அவனுடைய படத்தை தனக்கு எதிரே மாட்டி அழகு பார்த்தாள்-பூஜை செய்தாள். இருவரின் கடிதத் தொடர்பு பதிவுத்திருமணத்தில் போய் நின்றது. சுலோச்சனா அந்த நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். மலர்மன்னன் கல்கத்தாபோய் வந்ததும் திருமணத்திற்கு நாள் குறிப்பிடுவார் என்று எண்ணினாள். கல்கத்தாவிலிருந்து கடிதம் வந்தது.

சுலோச்சனாவுக்கு,

உனக்குக் காசம் இருப்பதாக தாராபுரம் டாக்டர் ரவீந்தர்மூலம் அறிந்தேன். இனி, என்னை நம்பிப் பயனில்லை. நான் வருகின்ற ஞாயிற்றுக் கிழமை ஒரு ஏழைப்பெண்ணை மணம் முடித்துக்கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

இப்படிக்கு
மலர்மன்னன்.

கடிதத்தைப் படித்ததும் சுலோச்சனாவுக்குக் கண்கள் இருண்டுவிட்டன. அவள் செய்ததீவினை, அவளையே சுட்டுவிட்டது குறித்து அவள் புலம்பினாள்.

அன்புள்ள மலர்மன்னருக்கு,

கடிதம் கண்டேன். தங்கள் மேலுள்ள அன்பினால், எனக்கும் ரவீந்தருக்கும் நடைபெற இருந்த திருமணத்தை நிறுத்துவதற்கு, எனக்குக் காச நோய் என்று நானே ஒரு ராணுவ ஊழியன் என்ற பெயரில் ரவீந்திரனுக்கு எழுதினேன்.

தங்கள்
சுலோச்சனா.

இந்தக் கடிதம் கல்கத்தா போகும் போது, மலர்மன்னன் அந்த உணவு விடுதியில் இல்லை. முதல் இரவே சென்னைக்குப் புறப்பட்டுவிட்டான்.

★

சுலோச்சனா இன்னும் வாழாத பெண். வெள்ளைப் புறாவைப்போல் ஓடியாடி சமுதாயத் தொண்டு செய்கிறாள். புனிதமான சேவகி என்ற பட்டம், அவளுடைய கவலைகளையெல்லாம் கொன்றுவிட்டு, அவள் இதயத்தில் கோலோச்சுகிறது. ★

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

மருதை : ஆமாம் அத்தான்! கிரை வகைகளில் சிறந்தது 'பொன்னுங்காணி' கிரையே. மிருகங்களில் அரசன் சிங்கம் என்பதுபோல கிரை வகைளில் அரச பீடத்திற்கு உரியது 'பொன்னுங்காணி'.

வேலன் : அப்படியா மருதை. நம் மக்கள் ஏன் இந்தக் கிரையை அடிக்கடி உபயோகிப்பதில்லை?

மருதை : அதுவா அத்தான். அக்கிரையை கொஞ்சம் பொறுமையாய் ஆய வேண்டும். தமிழ்க் குடும்பங்களே இப்பொழுது மிகவும் சோம்பிக் கிடக்கின்றன மாமா! தமிழர் பிற நாட்டார்க்கு மட்டும் அடிமைகளாய் வாழ்ந்தாரில்லை. பிறநாட்டு அநாகரிகத்திற்கும் எப்படியோ அடிமை ஆயினர். தமிழர் தங்களைப்பற்றியே கவனிக்காமல் இருந்ததன் பயனுக இன்று தமிழ் மொழி பிறமொழிச் சேர்க்கையால் எவ்வளவோ நலிவுற்று இருக்கிறது. அதைப்போலவே தம்மைப் பற்றி கவனியாது விட்டுவிடவே இன்று தமிழர் உடல்நிலை பல பிணிகளுக்கு உள்ளாகி, தமிழன் உருவம் மெலிந்தும், கைகள் மிகச் சூம்பியும், வளைந்த மார்பும், தாழ்வுற்ற பார்வையும் உற்றும் இருக்கின்றனர். இவையெல்லாம் போலி நாகரிகங்களின் கோளாறு. பாதி சோறும் பாதி கிரையும் உண்டபோது தமிழர் நேர்கொண்ட பார்வையும், அகன்ற மார்பும், வலிவுடைய கைகளும், தளராத நடையும் கண்களில் கண்ணாடி இல்லாமலும் திகழ்ந்தனர். அன்று தோளினைக் கண்டவர்கள் தோளினையே கண்டு மகிழ்ந்தனர். காலினைக் கண்டவர் காலினையே கண்டு மகிழ்ந்தனர். இவையெல்லாம் மறைவுறக் காரணம், தான் உண்ணும் உணவில் கிரைக் கறியமுது உண்பது மிகக் கேவலம் என நினைத்தனர். இன்றையத் தமிழர் கிரையை ஒதுக்கி வாழ்வது நாகரிகம் என நினைந்தும் விட்டனர் சிலர்.

வேலன் : அடி மருதை! என்ன நீண்ட ஒரு சொற்பொழிவே செய்துவிட்டாயே. போதும்; போதும்; பொன்னுங்காணி கதை தெரியாது போலும் உனக்கு. ஏதோ கதை அளக்கிறாய். அதனுடைய குணங்களைப்பற்றிச் சொல்லவில்லையே.

மருதை : மாமா! பொன்னுங்காணி என்றால், பொன்-ஆம்-காண்-நீ; அதாவது 'இதனை உண்டால் உன் உடல் பொன்னுகக் காண்பாய்' என்பது பொருள். ஆகவே இதனை அரச கிரை என்று வழங்குவதில் என்ன குற்றம்? பொன்னுங்காணிக் கிரையை, புளியை நீக்கி உப்பும் மிளகும் இட்டு வதக்கி வெண்ணெயுடன் கலந்து 40 நாள் இடைவிடாது உண்டால் உடல் பொன்னிறம் ஆகும். மேலும் இக்கிரை அழகு பெறவும், நீண்ட ஆயுள் பெறவும் கண் குளிர்ச்சி அடையவும் உதவும். மருத்துவர் கண் காசம், கண் புகைச்சல், கருவிழி நோய், வாயு, அனல், ஈரல் நோய், கீழ் வாயில் உண்டாகும் நோய்கள் நீங்கும் என்பர். அது மட்டுமா-அதன் தைலம் உபயோகிக்க 96 வகை கண் நோய், அழல் நோய் தீரும் என்பர். கிரை பல மருந்துகள் செய்யத் துணையாகவும் இருக்கும். இது செம்புச் செந்தூரம் செய்யவும் உதவுமாம். இதனைக் காயு கற்பப் பூண்டு என்றும் கூறுவர் தமிழர்.

வேலன் : பெண்மைக்கு உரியவள் நீயே, நீயே பெண். நீ இக்கிரைச் சோற்றைப் பிசைந்து போடும்போது உன் அழகைப் பருகிக்கொண்டே இருந்தேன். வாழ்க்கைக் கரையின் முடிவின்பத்தைக் காண அமைந்த ஓடம் நீ. இல்லறச் சோலையில் வாழும் தெய்வமகளா நீ, சிறந்த மயிலோ, அல்லை மக்கள் இனத்தைச் சார்ந்த பெண்தானோ? நீ, இன்ன வகையைச் சார்ந்தவள் எனத் துணிந்து சொல்லமுடியாமல் என் மனம் மயங்குகிறது. மருதை! நீ மூங்கிலைப் போன்ற தோளினை உடையவளாய்த் திகழ்கின்றனை, உனது உடலோ தளிர்போன்ற தன்மையுடையதாய் விளங்குகிறது பல் முத்துப்போல் இருக்கிறது. (காரணம் கரிசலாங்கண்ணி தண்டை எடுத்துப் பல் துலக்குகிறாய் போலும்) மை திட்டப்பெற்ற கண்களை உடையவளாயும், இயற்கையாக அமைந்த நல்ல மனம், உடையவளாயும் திகழ்கின்றனை. என் கண்ணுள் இருக்கும் கருமணியாய்த் திகழும் நின்னை வள்ளுவர் எப்படிப் படம் பிடித்துக் காட்டுகிறார் என்று பார்? இத்தனையும் நான் சொல்லவில்லை. உன்னைப் படம் பிடித்த வள்ளுவர் சொல்லுகிறார்.

"அணங்குகொல் ஆய்மயில்
கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என்
நெஞ்சே"

"முறிமேனி முத்தம்
முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள்
அவட்கு"

மருதை : அத்தான் போதும் வர்ணனை, வெளியே காத்திருக்கும் பெரியவரை விசாரிக்கவும்.

வேலன் : (சாப்பிட்டு வெளியே வந்து, வணக்கம்! பாண்டியரே! நீண்ட நேரம் ஆயிற்றே? தாங்கள் வந்திருப்பதாக ஒரு குரல் கொடுத்திருந்தால் தாங்களும் உடனிருந்து உண்டிருக்கலாமே. அந்தோ! தங்கள் வரவு தெரியாமலே போயிற்றே. மன்னிக்கவும் வந்த வேலை?

பாண்டியன் : வேலா! நீயே நற்றமிழ்ச் சாத்தன். உனது வாழ்க்கையே வாழ்க்கை. உள்ளே நீ நடத்திய உரையாடலில்-நான் ஒளி பெற்ற மனிதனுகிவிட்டேன். நேரம் அதிகமாகிறது. எனது மகள் மேகலைக்குக் கண் நோய். கொஞ்சம் பொன்னுங்காணி கிரை தருவாயா?

வேலன் : பாண்டியரே! அது என்ன அப்படிக் கேட்டுவிட்டீர். அதிகமாகவே தருகிறேன். நீங்களும் அக்கிரையைப் பயிர் செய்யலாம் (என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய் கை நிறைய பொன்னுங்காணிக் கிரை கொண்டு வந்து பாண்டியரிடம் கொடுத்தான்).

பொன்னுங்கானி கிரையைப் பெற்ற பாண்டியன், "சிறந்த எழுத்தாளன் என்று பெயர் பெற்ற எனக்கு, மூக்குக் கண்ணாடியின் தடிப்பு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறதே-எனக்கு இப்படி ஒரு மருதை கிடைக்கவில்லையே!" என்று மனத்திற்குள் அங்கலாய்த்துக்கொண்டான்.

- சிறுவை
அனசூயா மோகன்சுந்தரம்.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

'தங்களின் அஞ்சல் எங்களை அஞ்ச வைத்தது. அறியாமையைப் போக்கியது. அதன் விளைவு, தமிழ்ப் பலகை இப்பொழுது மனைக்குமுன் தொங்குகிறது வணக்கம்.'

இன்னணம்,
'மூவர்'

கிறித்துவப் பாதிரிமார், தங்கள் உடலை, ஒருவகை தைத்த துணியால் மறைத்துக்கொள்கின்றனர். அதை 'அங்கி' எனச் சொல்லுகின்றனர். 'அங்கம்' என்றால் உடலென்றும், அங்கத்திலணியப்படுவதால் 'அங்கி' என்றுங் கொண்டனர் போலும். 'அங்கம்' என்பது வடமொழிச் சொல். இதன் பொருள், உறுப்பு அல்லது கூறு அல்லது பகுதி என்பதாகும். உடலின் உறுப்புக்களைத்தான் அங்கமென மொழிகின்றனர் வடமொழிவாணர்கள்.

'படைகுடி கூழமைச்சு
நட்பரண் ஆறும்
உடையா னரசருள் ஏறு'
(குறள்-381)

என்ற குறளுக்கு விளக்கமெழுத வந்த பரிமேலழகர், 'வடநூலார் இவற்றை அங்கம் என்பர்' எனக் கூறுகின்றார். உடலைக் குறிப்பதற்குத் 'தேகம்' என்ற சொல் வடமொழியிலுள்ளது. 'அங்கி என்ற சொல்லைத் தவிர வேறு எச்சொல்லாலும் அத்தைத்த ஆடையைக் கூறமுடியாது. வேண்டுமானால் ஆங்கிலத்திற் கூறலாம். தமிழில் மட்டும் கூறமுடியாது.' என வாதிப்பவர்களுக்கு விடை கூறக் கடமைப்பட்டவனுவேன்.

சைவ-பௌத்த-சமணத் துறவிகளும் இவ்வகை தைத்த ஆடையைத்தான் அணிந்தார்கள்-அணிகிறார்கள். இம்மெய்ப்பைக்குக் 'குப்பாயம்' என்பது பெயராகும். இச்சொல் திருவாசகம் என்ற நூலில் வந்துள்ளது. பொதுவாகத் துறவிகள் அணியும் இவ்வாடைக்குக் குப்பாயம் என்பதே பொருந்துவதாகும். இன்றைய நிலையில் இச்சொல் வழக்கில் இல்லை. வழக்கில் வந்தால் வண்டமிழ் உயரும்.

'வெள்ளைக் கலிங்கத்தார்
வெண்டிரு முண்டத்தார்
பள்ளிக் "குப்பாயத்தர்"
அன்னே என்னும்
பள்ளிக் குப்பாயத்தர்
பாய்பரிமேற் கொண்டென்
னுள்ளங்க வர்வரால்
அன்னே என்னும்'

(திருவாசகம்-அன்னைப்பத்து-7) என்பது அப்பாடல்.

ஆண்மக்கள் உடுக்கும் உடைக்கு ஏற்ற தமிழ்ச் சொல்லுண்டா? எனக் கேட்கின்றனர் பலர். யான் பல புலவர்களைக் கேட்டதற்குப் பலன் 'இல்லை' என்ற பதில். அதற்காக வருந்தியுமிருக்கிறேன். செம்மை சான்ற ஒரு மொழியில் இடுப்பாடைக்குக்கூடவா பெயர் இல்லை? ஏன் இருக்கமுடியாது? 'இருக்க வேண்டும்.' எனத் திடங்கொண்டு சில இலக்கியங்களைத் தேடினேன். வெற்றியுமுற்றேன்.

வள்ளுவப் பெருந்தகை யாத்த திருக்குறளிலும் கொங்கு வேளிர் பாடிய பெருங்கதையிலும் இருவேறு சொற்கள் வழங்குகின்றன. நட்பைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது,

'உடுக்கை யிழந்தவன்
கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'
(குறள்-788)

என உடுக்கும் உடையை, 'உடுக்கை' என்று சுட்டியுள்ளார்.

இலாவண காண்டம், மண்ணுநீராட்டியது என்ற பகுதில், உடுக்கும் உடைக்கு 'மடி'யெனப் பெயர் கூறியுள்ளார் கொங்குவேளிர்.

'வெண்டுகிலிணை மடி விரித்தனருடீஇ' (வரி-131) என்பதவ்வடி.

எதாவது சிறு பொருள்களை வைத்துக்கொள்வதற்காக இடுப்பின் வலப் பக்கத்திலோ அல்லது இடப் பக்கமோ உடுக்குமுடையிலொரு நுனியைப் பயன்படுத்துவர் மக்கள். அதை 'மடி' என்ற பெயரால் வழங்குவர். 'மடி' என்பது பல பொருளொரு சொல். 'மடி' என்றால் சோம்பலென்றும் பொருள் உண்டு. அதைத் திருக்குறளில் காணலாம்.

'ஆகூழாற் றோன்று
மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி'
(குறள்-371)

என்பதது. மடியென்ற வினைச்சொல்லும் வழக்கிலுள்ளது. 'காயும் ஆடையை எடுத்து மடி' என்பதுபோல வரும்.

மேற்காட்டிய இரு சொற்களும் வழக்கில் இல்லை. அதற்குப் பதிலாக 'வேஷ்டி' என்ற சொல் பயின்று வருகிறது. 'வேஷ்டி' என்பது ஆரியச் சொல். அதை 'வேட்டி' எனத் தமிழில் வழங்குகின்றனராம். இப்படிக் கூறுதல் பொருந்தாது என நாம் கூறினால்,

'வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த
சொல்லாகும்மே'
(தொல். சொல். எச்சவியல்-401.)

எனத் தொல்காப்பியரே இதற்கு ஆதரவு காட்டிவிட்டார், நீ என்னையா இது பொருந்தாது என்கிறாய்?' என்று சிலர் கூறுகிறார்கள். 'சொற்கள் இல்லையென்றாலும், எச்சொல்லுங் கூற முடியாவிட்டாலும், வேற்றுமொழிச் சொல்லால் சொல்லுக' வென்பது தொல்காப்பியர் விதித்த விதி. இவ்விதியை மாறுபவர்கள் தமிழ் மொழியின் பகைவர்களாவர். பெற்ற தாய் வேண்டுமா? அல்லது மற்ற தாய் வேண்டுமா? இதை நீங்களே முடிபு செய்து ஒரு முடிவுக்கு வர வேண்டுகிறேன்.

— க. சி. இராசியண்ணன்

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
மை.வ. சங்கு[illegible] திண்டுக்கல் ரோடு, மதுரை.

நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

ரோம் நாட்டு வீரன்.

வாழ்க்கை வரலாறுகளை எழுதுதல் தனிக்கலை. அன்றாட நிகழ்ச்சிகளை - தனி வாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் நேருக்குநேர் சேர்த்துத் தொகுத்து வைத்து எழுதுவது ஒருவகை. கல்வெட்டுக்களையும் பட்டயங்களையும் கற்றறிந்து தன் கைவண்ணத்தையும் சேர்த்துப் படைப்பது இன்னொரு முறை. சர். வால்ட்டர் ஸ்காட்டின் வாழ்க்கையை அவரது மருமகன் எழுதினார். குறை நிறைகளை அப்படியே சொல்லியிருந்தார். டாக்டர் ஜான்சனைப் பற்றி அவருடன் தோழனாகவும் பழகிய பாஸ்வல் எழுத்துக்கு எழுத்து எழுதியிருக்கிறார். இவையெல்லாம் முன்வகையைச் சேர்ந்தன. அந்த ஆசிரியர்கள் தம் வரலாற்று நாயகர்களின் காலத்திலேயே வாழ்ந்தவர்கள். அதனால் தடுமாறாமல், அலையாமல் உண்மை நிகழ்ச்சிகளை அப்படி அப்படியே சேகரித்துத் தொகுத்துத் தர முடிந்தது.

இரண்டாம் வகையினர் நாட்டு வரலாற்றைப்போல் எப்படியோ தொகுக்கின்றனர். அவர்களால்கூட அப்படியே நம்பமுடிவதில்லை, தாம் தொகுத்துத் தருவனவற்றை. ஆதிலும் வரலாற்று நாயகர்களின் அந்தரங்க வாழ்க்கையையும் குடும்ப நிகழ்ச்சிகளையும் அப்படியே தரமுடிவதில்லை. ஆனால் இந்த விதிக்கு மாறாக அங்கங்கே சில ஒளி மீன்கள் பிரகாசிக்கத்தான் செய்கின்றன. மெக்காலேயின் கட்டுரைகளைப் படிக்கையில் அவன் காலத்திய ஆங்கில வாழ்வு தெளிவாகத் தெரிகிறது. புளூடார்க்கின் எழுத்துக்களை ஆராயும்போது அவன் காலத்திய ரோம சமுதாயம் பெற்றிருந்த பெருமையும் திறமையும் தெரிகின்றன. அனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பைப் படிக்கையில் அவன் காலத்திய தமிழகம் பெற்றிருந்த சிறுமையும் பூசலும் அந்நியர் ஆதிக்கமும் தெளிவாய்த் தெரிகின்றன. இப்படி, ஆண்ட மன்னர்களின் வாழ்க்கையையும் அறிஞர் பலரின் காலத்தையும் தொகுத்து, வகுத்து எழுதும் முறை தமிழ் உரைநடையில் இன்று வளர்ந்து வருகிறது.

சாமிநாத சர்மா எழுதிய பல நூல்கள் ஓரளவுக்கு வெளிநாட்டாரை அறிமுகப்படுத்தியிருக்கின்றன. மைக்கேல் காலின்சின் வரலாற்றைத் தக்க நேரத்தில் எழுதித் தந்து தன் இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆதரவு தேடிக் கொண்டார் நெல்லை ப. இராமசாமி.

நம்நாட்டார் நீங்கிய பிறநாட்டுச் சிந்தனையாளர், செயல் மறவர், அரசியல் வல்லார், புரட்சி வல்லார் முதலிய பலரது வாழ்க்கைகளும் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆனால் அதை எழுதுகையில், அதனால் தமிழகம் என்ன பயன் பெறவேண்டுமோ அதைத் தரத்தவறி விடுவோர் பலர். பிறநாட்டார் வாழ்வினைப் படிக்கையில் தமிழகம் பெறவேண்டிய பயனை உணர்ந்து எழுதும் ஒரு சில எழுத்தாளர்களுள் சிறந்தவர் நமது சிந்தனைச் சிற்பி.

ஏறத்தாழ இருபத்தைந்து வரலாற்றாசிரியர்களின் கருத்துக்களை ஆராய்ந்து பார்த்துக் கண்டெடுத்த ஒளி முத்துக்களைத் தொகுத்து ஜூலியஸ் சீசரின் வாழ்க்கையைப் படைத்திருக்கிறார் திராவிடர்முன்.

கழகத் தோழர்கள் மட்டும் அன்றி, பிறரும் ரோமின் பெருமையை- ஜூலியஸ் சீசரின் திறமையை-பதவி வெறியர்களால் அமைதி குலைக்கப் பட்டதை, எடுத்துப் படித்து அறியும் வண்ணம் கூறுகிறார்.

நடை எழிலாகவும் எளிதாகவும் உள்ளது. சிக்கலானவற்றையும் தெளிவாக, வரையறுத்துச் சொல்வதோடு, சீசரின் ஆணவத்தையும் குறிக்கத் தவறினாரில்லை.

"ஹெயில்சீசர்!" என்று வாழ்த்தி வணங்கி அவன்முன் நின்ற கூட்டம் அவனைக் கடவுளுக்கு சமமாகக் கருதிற்று. "மேலுலகத்தில் கடவுள் இருக்கிறாரோ இல்லையோ; நம்முலகத்தின் கடவுள் சீசர்தான்!" என்ற எண்ணத்தை வளர்க்க முனைந்தவன் அவன். இந்த எண்ணம் அவனுக்குப்பின் நிலைநிற்கவில்லை. **"சீசர் தன்னை ஒரு கடவுளென்றே சொல்லிக் கொண்டு பெருமைப்பட்டான். ஆன்மார்த்திகத் துறையிலே அவன் அழிந்த கடவுளாய்விட்டான். ஆனால் உலோகாயுதத் துறையிலேயும் உலக வரலாற்றிலேயும் அவன் அழிக்கமுடியாத கடவுளாய் விட்டான்!"** என்று வரும் ஆசிரியரின் சொற்கள் இதனைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அழகிய அச்சும், கவர்ச்சியான அட்டையும் அணிக்கு அணி செய்கின்றன.

இந்த ரோம்நாட்டு வீரனின் வாழ்க்கையை அறிவதால். ரோமின் வரலாற்றை அறியலாம்; குடிமக்களின் நல்வாழ்வுக்கு-அமைதிக்கு, சர்வாதிகார ஆட்சியும் பதவிப் போட்டியும் எப்படிப் பகைகளாகின்றன என்பதை அறியலாம்.

வாழ்க்கை வரலாறுகளை எழுதுவதில் தனித்துவம் உடைய தன் திறமையைத் திராவிடத்துக்கு படைக்கும் சிந்தனைச் சிற்பி அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

ஆசிரியர்: **சி. பி. சிற்றரசு,**
வெளியீடு: முத்துவேல் பதிப்பகம், திரிச்சிராப்பள்ளி
விலை ரூ. 1-50.

★

நாடோடி மன்னன் வெற்றி விழா மலர்

நூறுவதுநாள் கொண்டாடிய வெற்றிப்படம் "நாடோடி மன்னன்." அதன் சிறப்பியல்புகளை, கதைச் சுவையை, நடிப்புத்திறனை, பாடல் பாங்கை, இசைமழையை, சுவைப்பு வகையை, வழங்கிய முறையைப் பாராட்டினர், தமிழுலகத்தவர். அரசியல் வாதிகளும் வேறு துறையினரும் அவ்வாறு பாராட்டி வழங்கிய தொடர்களின் தொகுப்பே இம்மலர். இடையிடையே புகைப்படங்கள் பல அழகு செய்கின்றன. நல்ல முயற்சி; அழகிய பதிப்பு; வண்ணமுகப்பு; வாங்கலாம்; பார்க்கலாம்; படிக்கலாம்.

வெளியிட்டோர் : எம்ஜியார் பிக்சர்ஸ்.
கிடைக்குமிடம் : ஐடியல் பிரிண்டர்ஸ், பிராட்வே, சென்னை.
விலை ரூ. 1-25.

★

தென்னகம் (வார இதழ்)

கனிச்சுவையும் கன்னல் தமிழும் இனிய விளைவுகளைத் தந்திருக்கின்றன. அன்றாட அரசியல் விமர்சனங்கள். கொள்கை விளக்கங்கள் - சிறுகதைக் கொத்துக்கள்-சுவைத் துணுக்குகள் ஆகிய அத்துணையும் வழங்கப்படுகின்றன தென்னகத்தில். வண்ணமுகப்புக் கொண்ட நல்ல எண்ணத் தொகுப்பு, வளரும் தென்னகம்! ஆசிரியரும் மாணவரணியின் தலைவருமான திரு. மதியழகன் அவர்களின் தொண்டால் பெருமை பெறும் தென்னகம் அவரை வாழ்த்துகிறது.

ஆசிரியர்: **கே. ஏ. மதியழகன்**, பி. ஏ.
அலுவலகம்: சென்னை-1.
தனி இதழ் 16 காசு.

★

தனி அரசு (தின இதழ்)

தென்பாண்டி மண்டலத்தின் திரு ஆசைத்தம்பி அவர்கள் திராவிடத் தனியரசு காணும் போர்ப்படைக் கருவியாய் அளித்துவரும் "தனியரசு" ஏடு, மார்ச் 15 முதல் நாளிதழாய் மலர்ந்திருக்கிறது. காகிதக் கட்டுப்பாட்டுக் கொடுமை மிகுந்திருக்கும் இந்நாளில் கழகத்திற்கு ஆதரவாய் பெரிய அளவில் நாளேடு நடத்தும் அவர் ஆற்றலும் ஆர்வமும் பாராட்டுதற்குரியன சுவையான செய்திகளை உடனுக்குடன் தரமுயலும் "தனியரசு"க்கு நல்வரவு கூறுகிறோம்.

ஆசிரியர்: திரு. **ஏ. வி. பி. ஆசைத்தம்பி** எம். எல். ஏ.,
அலுவலகம்: 5, கிராம வீதி, நுங்கம்பாக்கம்,
சென்னை-6
தனி இதழ் 7 காசு.

—முத்துவேலன்

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

உறுப்பினர்களின் வருகையையும் அக்கறையையும் கட்டி வளர்க்க வேண்டிய பொறுப்பிலுள்ளார் அவைத் தலைவர். மக்களாட்சி காக்கப்பட..

பொறுப்பான பதவிகளில் உள்ளோர் பொன்னான காலத்தை அணுவளவும் இழக்கக்கூடாது. காரண காரியமின்றிக் கண்டபடி அலையக் கூடாது என்பது பொதுவான அறிவுரை. ஏனெனில் அன்னாரை நம்பிக் கிடக்கும் அருஞ்செயல்கள் எண்ணில. இச்சட்டம்- இயற்கைக் கட்டளை- வாழ்க்கை விதி எல்லோருக்கும் உரியதுதான். குறிப்பாக நாட்டின் சட்டத்தை வகுப்பவர்களும், கட்டளைகளைப் பிறப்பிப்பவர்களும், விதிகளை உருவாக்குபவர்களுமான அரசு உறுப்பினர்கள் இதனைப் பின்பற்றியாக வேண்டும்; கட்டாயம். ஆனால்...? அனந்தசயனம் ஒலித்த ஓலத்தின் எதிரொலி மறைவதற்கு முன்பே மற்றுமொரு கொடுமை நடந்திருக்கிறது. இந்தப் பெருமையைத் தட்டிக்கொண்டு போயுள்ள மாநிலம் பம்பாய் ஆகும்.

21-3-59 அன்று பம்பாய் சட்டசபையில் பல மான்யக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன. சபையில் கோரிக்கை விடுக்க வேண்டிய மந்திரிகளோ சபை தொடங்கப் பெற்றும் வரவில்லை. மொத்தம் 27 மந்திரிகள் பம்பாய் சட்ட சபையில். கொலுபொம்மைகள் மொத்தம் 27. ஆனால் ஒன்று கூட அன்று குறித்த நேரத்தில் சபைக்கு வரவில்லை! மக்களாட்சியில் அமைச்சர் பெருமக்களின் தரம்தான் இருந்தவாறு என்னே.

தம்தம் துறைக்கு மானியம் கோர வேண்டிய அமைச்சர்களே வரவில்லையாம்!

வகுப்பினை நடத்திச் செல்ல வேண்டிய ஆசிரியர்களே வகுப்பறைக்கு வரவில்லையாம்! வேதனை தரும் பணம் விரயமாகும் கதை! நிலையை உணர்ந்த சபா நாயகர், அளவு கடந்த ஏமாற்றத்துடனும் சினத்துடனும் சபையை ஒத்தி வைத்திருக்கிறார். 15 நிமிடம் ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் ஒரே ஒரு அமைச்சர் அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்திருக்கிறார். "அடாது செய்துவிட்டேன்; ஆகாத வழி சென்றுவிட்டேன்; பலருக்குக் கட்டுப்பாட்டைச் சொல்லித் தர வேண்டிய நானே தவறிவிட்டேன்! மன்னிக்கவேண்டும் ஐயா!" என்று தலைமையாசிரியரிடம் கெஞ்சிக் கூத்தாடும் ஆசிரியர் போல், அமைச்சர் சபாநாயகரிடம் மன்னிப்புக் கேட்டாராம். சமுதாயம் இந்தத் தவறை மன்னிக்க முடியுமா?

ஒரு அமைச்சர் குறித்த நேரத்தில் இல்லாது போனால் அவரை நம்பிச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் வறிதே கெட்டழிகின்றனவே! அதற்காகும் இழப்பை ஏற்போர் யார்?

மக்கள் தரும் வியர்வைத் துளிகள் வீணாக்கப்படுவதை — வரிப்பணம் விழலுக்கிறைக்கப்படும் நீராவதை யார்தான் ஒப்புவர்?

—மா. பாண்டியன்

பத்துக் கேள்விகள்

வேகமாக வந்த பிளைமவுத்கார், ஒரு பெரிய பங்களாவின் முன் வந்து நிற்கிறது. அதிலிருந்து, **தியாகி திருநீலசுந்தரம்** இறங்குகிறார். அவர் நெற்றி வியர்த்துக் கொட்டுகிறது. வியர்வையால் சில்க் ஜிப்பா முழுதும் நனைந்திருக்கிறது. உடல் கிடுகிடுவென ஆடுகிறது. மீசை துடிக்கிறது. கண்கள் குங்குமம்போல் சிவந்திருக்கின்றன. காரின் கதவைப் படீரென்று சாத்திவிட்டு, டிரைவரைப் பார்த்து, கனல் தெறிக்கப் பேசுகிறார்—

"சோமு, காரைக் கொண்டு போய் 'ஷெட்'லெ நிறுத்து. இன்னம் பத்து நாளைக்கு என்னைக் கேட்காமெ காரை ஒரு அடி நகட்டாதே. தேர்தலாம் தேர்தல்; மண்ணாங்கட்டித் தேர்தல். காங்கிரஸ் கட்சியிலே அபேட்சகனா நின்னுட்டா, மானத்தை வித்துட்டேன்னு அர்த்தமா? என்னைப் பாத்து அத்தனை கேள்வி கேக்கிறதுக்கு அந்த அயோக்கியனுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கணும்! வரட்டும் இந்தத் தியாகி திருநீல சுந்தரம் முதலியார் யாருன்னு காட்டுறேன்."

தோள்பட்டையை விட்டு நழுவிய கண்டைத் துண்டை கழுத்தைச் சுற்றிப் போட்டுக்கொண்டு பங்களாவை நோக்கி நடந்தார். பங்களாவின் வெளிச் சுவரில்—"காங்கிரஸ் கட்சி அபேட்சகர், தியாகி திருநீல சுந்தரத்தையே - மாட்டுச் சின்னத்தில் குறியிட்டு ஆதரியுங்கள்" என்று ஒட்டப்பட்டிருக்கிற போஸ்டர் அவர் கண்ணில் படுகிறது. கோபம் அதிகரிக்கிறது—

"யாரங்கே. டேய் முனுசாமி இந்தப் போஸ்டரைக் கிழிச்சு எறி!"

"எஜமான், அது நம்ம தேர்தல் போஸ்டருங்க; உங்க பேரை, முழுசா எழுதியிருக்கு."

"மாட்டுச் சின்னம் படம் போட்டிருக்கு..."

"அட தடிமாடு, எனக்குத் தெரியுண்டா! கிழிச்சு எறி."

"நீங்கதானே எஜமான், காலையிலே ஒட்டச் சொன்னீங்க."

"ஆமாண்டா! நானேதான் இப்பக் கிழிக்கவும் சொல்றேன். சொன்னதைச் செய். சுண்டைக்கா பயலெல்லாம் கண்டபடி பேச ஆரம்பிச்சுட்டான்! நகர சபை மெம்பர் பதவி ரொம்பப் பெரிசு! இதுக்குப் போயி பிரபாத விளம்பரம். சுவரொட்டி; ஆளு; ஆடம்பரம்; சேச் சேச் சேச்செ (கோபமாக வேலைக்காரனைப் பார்த்து) டேய் முனியா என்னைத் தேடி யார் வந்தாலும் சரி? நான் ஊர்லெ இல்லேன்னு சொல்லிடு"

"எஜமான் மந்திரி வந்தாக் கூடவா...?"

"அவுக அப்பனே வந்தாலும் அதுதான்..."

—செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே செல்வதற்காக, காலை, படக் படக்கென்று உதறுகிறார். செருப்பு திசைக்கு ஒன்றாக ஓடுகிறது. உள்ளே சென்று தனது தனி அறையில், மேஜைமேல் இருந்த மின் விசிறியின் விசையை அழுத்திவிட்டு, தலையைப் பிடித்தபடி சோபாவில் அமருகிறார். கணக்கப்பிள்ளை கனக சுப்பையர் மெல்லக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறார்.

"ஓட்டு கேன்வாஸ் பண்றதுக்கு, என்னையும் அழைச்சுண்டு போக பத்து மணி வரையிலும் காத்திண்டிருந்தேளாம். முனியன் சொன்னான். ஆத்திலே தோப்னாருக்கு திதி. கொஞ்சம் நாழியாயிடுத்து. இப்பதான் வந்தேன்...ஏன் ஒருமாதிரி இருக்கேள்?"

திருநீலசுந்தரம் எழுந்து ஐயரை கோபமாகப் பார்த்துவிட்டு. கூண்டுப் புலியைப்போல் அங்குமிங்கும் உலவுகிறார். கனகசுப்பையர் பேச்சை மீண்டும் தொடருகிறார்.

"மூலைவீட்டு மோகனசுந்தர முதலியார் வந்தார்; ஐநூறு ஓட்டை அவர் கையிலே வச்சிண்டிருக்காரம் அது விஷயமா பேசுறதுக்கு சாயங்காலம் வர்ரேன்னு சொன்னார்! மணிமாறன் கோஷ்டி ஒரு நூறு பேர், அவா சின்னத்தை சைக்கிள்லே கட்டிண்டு, ஏதோ கோஷம் எழுப்பிண்டு இப்பதான் இந்தப் பக்கமா ஊர்வலம் போனா! நாமும் கிராமத்திலேயிருந்து நூறு காளைமாடுகளை வரவழைச்சு, மாட்டுக் கொம்புகளில் நம்ம விளம்பரத் தட்டிகளை கட்டி, அதுக்குப் பின்னாலே ஐநூறு சைக்கிள்களில் காங்கிரஸ் கொடியைப் பறக்கவிட்டு ஊர்வலத்தை பிரம்மாண்டமா அமர்க்களப்படுத்திட்டோமன்னா, அவா ஊர்வலம் புஸ்வாணமாப் போயிடும். மக்களும் ஏதோ நமக்கும் செல்வாக்கு இருக்குன்னு நம்புவா... செய்றேளா, சொல்லுங்கோன்னா!

"அட ஏங்காணும் நீர் வேறே, என் வயித்தெரிச்சலைக் கிளப்புறீர். மணிமாறனே, மதிவாணனே வந்திட்டுப் போகட்டுமே! இதென்னய்யா பெரிய பதவி கெட்டுப் போச்சு."

"அதென்ன அப்படிச் சொல்றேள். நீங்களே சேர்மனாவரச் சான்ஸ் இருக்குன்னா!"

"அதுக்காகத் தகுதி இல்லாதவன் கிட்டெயெல்லாம்போயித் தாறுமாறாப் பேச்சு வாங்கணுமா? இன்னக்கி இருக்கிற நிலையிலே காங்கிரஸ் கட்சி என் சட்டைப் பையிலே இருக்கய்யா. நான் நெனைச்சேன்னா தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கே தலைவரா வரமுடியும்!"

"ஹி...ஹி...ஹி நீங்க எந்தக் காரியத்திலும் பவ்யமா நடந்துக்குவேள்ன்னு நேக்கு தெரியாதா என்ன? இருந்தாலும் தானா வர்ற பதவியை தள்ளிவிடுவானேன்னு நெனைச்சேன். ஆமா, உங்களை யாரு, என்ன கேட்டுட்டா?

"எல்லாம் இந்தக் காந்தி பண்ணி வச்ச வேலை. எல்லாரும் ஒன்னுதான். அரிசன முன்னேற்றம் உரிமை அது இதுன்னு சொல்லி அவரு காலத்தை முடிச்சுக்கிட்டுப் போயிட்டாரு. இப்பொ இவனுக யாரையும் மதிக்கிறது இல்லையே? நான் இந்தக் காமராஜுகிட்டே அப்பவே சொன்னேன். எனக்கு இந்தப் பிச்சைக்காரப் பதவியெல்லாம் வேண்டாமய்யா. 'எனக்கு இருக்கிற ஆறுமில்லு ஆயிரம் ஏக்கராவிலே கரும்புத் தோட்டம். ஊருக்கு ஊரு சினிமாக்கொட்டகை இவைகளுக்கு ஒரு இடைஞ்சலும் வந்திடாமெ நான் பாத்துக்கிட்டாப் போதும்' அப்டீன்னு. கேட்டாரா மனுஷன்? 'இல்லே நீங்க அப்படிச் சொல்லக்கூடாது. நான், உங்களுக்கு முன்பே எம். எல். ஏ. சீட்டுத் தர்ரேன்னு சொல்லி ஏமாத்திட்டேன். இப்பொ இதிலே இருந்துக்கங்க, வர்ற பார்லிமெண்ட் தேர்தல்லே உங்களை ஒரு எம். பி யாவே ஆக்கிடுறேன். இதை உறுதியா நம்புங்க உங்களைத் தவிர இந்த வட்டாரத்திலே வேறு ஆள் கிடையாது. இருக்கிற சிலரும் காங்கிரஸ் கட்சிக்கு உண்மையாகப் பாடுபட்ட தியாகியா இருக்கானேதவிர தேர்தலுக்குன்னு தயாரான-தகுதியுள்ள உங்கமாதிரி தியாகி கிடையாது. அதுவும்தவிர இந்த வட்டாரத்திலே மக்கள் செல்வாக்குப் பெற்ற தி.மு.க. தொண்டர் ஒருவர் அபேட்சகராய் நிற்கிறாராம். அவரை முறியடிக்க காங்கிரஸ் கொள்கையால் முடியாது. உங்களைப்போன்றவர்களால் தான் முடியும்.' அப்படி இப்படீன்னு சொல்லி முட்டுவாயைத் தாங்கினாரு! சரி நமக்கும் சமயத்திலே பெர்மிட் காண்டிராக்ட் இதுக்கு அவர் உதவி தேவைப்படுமே; மாட்டேன்னு சொல்லி அவரைப் பகைச்சுக்கக் கூடாதேன்னு நினைச்சு, சரின்னு ஒத்துகிட்டேன். அதுக்காக, பார்க்கத் தகுதியில்லாதவனையெல்லாம் நடந்து போய்ப் பார்த்து, பல்லைக் காட்டி ஓட்டுக் கேட்டேன். அந்தக் குப்பத்திலே இருக்கிற பயமட்டும் எவ்வளவு குறும்புத்தனமா நடந்துக்கிட்டான்.

(திருநீலசுந்தரம் போடுகிற கூச்சலைப் பொறுக்கமுடியாமல், உள்ளே சமைத்துக்கொண்டிருந்த அவர் மனைவி, கரண்டியும் கையுமாக அங்கு வருகிறாள். கனகசுப்பையர் ஒதுங்கிக்கொள்கிறார்.)

"உங்களை யாரு என்ன கேட்டுட்டா? இப்படிக் கடுகு மாதிரி வெடிக்கிறீங்களே அப்பப்பா... நானும் ஒரு மணி நேரமாப் பாக்குறேன் வீடே ரெண்டாப் போகுது."

"பழைய குப்பத்திலே இருக்கானே பழனியாண்டி மகன், அவன் தாண்டி-வட்டிக்குப் பணம் வேணுமின்னு நாய்மாதிரி நம்ம வாசல்லே காத்துக் கிடப்பான் பாரு, அவன் புள்ளே. எதிரே நின்னு பேசவே தகுதியில்லாதவன். ஜாதியிலே இழிவானவன். எங்கிட்டேயே கேள்வி கேக்குறான். பதில் சொன்னாத்தான், ஓட்டுப்போடுவாராம்! எவ்வளவு திமிர் இருக்கணும். அவுங்க ஜாதியிலேயே ஒருத்தர் மந்திரியா இருக்காருங்கிற அகங்காரம். அந்த மந்திரி கக்கனே நம்மவீட்டுக்கு வந்தா அவரையறியாமலேயே மேல் துண்டை எடுத்துக் கையிலே புடிச்சிக்கிறாரு! இந்தப் பய எவ்வளவு துணிச்சலா கேக்கிறான்."

"அப்படி என்னதான் கேட்டுட்டான் சொல்லித் தொலைங்களேன்!"

"தாங்கள் காங்கிரஸ் கட்சியிலே எப்பொழுது சேர்ந்தீர்கள்?

அது தடியடிபட்ட காலத்தில் உங்கள் பங்கு என்ன?

சுதந்திரப் போராட்டக் காலங்களில் நீங்கள் எங்கே, எந்தக் கட்சியில் இருந்தீர்கள்?

தியாகி என்கிற பட்டம் தங்களுக்குப் பொருந்துமா?

பொருந்துமென்றால் எதை எப்பொழுது தியாகம் செய்திருக்கிறீர்கள்?

வெள்ளைக்காரன் காலத்தில், காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக நடந்து லஞ்சம் பெற்றீர்கள் என்ற செய்தி உண்மைதானா?

சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க விரும்பும் உண்மையான காங்கிரஸ்காரர்களைத் தாங்கள் தெருத்தெருவாய்த் திட்டிக்கொண்டு வருவது ஏன்?

காங்கிரஸ் கட்சிக்கு உண்மையாகவே ஜாதியின்மேல் நம்பிக்கை இல்லை என்றால், தாங்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் 'முதலியார்' என்ற பட்டத்தை வெட்டி எறியாமல், இன்னும் ஒட்ட வைத்துக் கொண்டிருப்பது ஏன்?

ஏழை விவசாயிகளுக்கு நியாயமான முறையில் பங்கு கொடுக்கும்படி அறுபதுக்கு நாற்பது சட்டம் வந்தும் தாங்கள் அதன்படி நடக்காமல் உழைக்கும் விவசாயிகளை வஞ்சித்து வருவதும் ஏன்?

ஆதிதிராவிடர்கள் முன்னேற்றத்தில், தாங்கள் அக்கறை கொள்ளாமல், அவர்களை இன்னும் பள்ளு, பறையென்று இழிவாக அழைத்து, தேர்தல் காலங்களில் ஓட்டுப் பெறுவதற்காக மட்டும் அவர்களிடம் ஒட்டி உறவாட வரும் கீழ்க் குணம் ஏன்?

கேட்டியா, இந்தக் கேள்விக்கெல்லாம் பதில் சொன்னா எனக்கு வோட்டுப் போடுவானாம். இல்லையின்னா அந்தப் பசங்களை ஆதரிச்சு வேலை செய்வானாம்!"

"ப்பூ, இவ்வளவுதானா! நான் என்னமோ உங்க சொத்துலியே பாதி கேட்டுட்டானாக்குமின்னு நெனைச்சேன்!"

"நீ என்னடி சொல்றே!"

'உள்ளத்தைச் சொன்னா ஒடம்பு எறியத்தானே செய்யும். போங்க, போயி ஏர்க்கண்டிஷன் ரூமுலெ படுத்துத் தூங்குங்க. ஒங்க டெபாசிட்டைக் காப்பாத்த ஐயரு வேலை செய்யட்டும்!"

(கனகசுப்பையருக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை. வாயைப் பொத்திக்கொண்டே வெளியேறுகிறார்.)

—நிலகரன்

ஜுபிடரின்
அண்ணா பத்தி

M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

விருத்தப் போட்டி

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
கனல்கக்கும் கடுமொழியும்
புடைத்தெழும்பும் வன்றோளும்
மனத்தை உந்தத்
தணல்கக்கும் கொதிப்பேறி
ஆர்த்தெழுந்தால் பகையோனின்
அம்பு தீண்டச்
சினம்கக்கும் செருக்களத்திற்
சாய்த்ததுகாண் திண்மையுடன்
திளைத்த வீரம்.
—இராம. கணபதி, அரிமழம்.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
வினைமுடிக்கும் பெருஞ்செயலால்
விளைவெடுக்கும் பல்புகழும்;
வீர வாழ்வும்
சுனைப்பெருக்கும்; குளிர்நெஞ்சும்
சுடுநெருப்பின் சுகப்பேறும்;
தோன்றல் எங்கள்
நினைவிருக்கும் நெடுஞ்செழியன்
பொதுச்செயலின் நிழலிருந்தால்
கேடர் மாய்வர்.
—ப. கணபதி, சோழபுரம்.

★

புனல்கக்கும் பொன்னிநதிக்
கரையினிலோர் பூங்காவிற்
புக்கே னங்கே,
நனிவிருப்பில் விளையாடும்
நாரிசடை தொட்டிழுத்து
"நங்காய்" என்றேன்!
அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
சினமிக்க முகக்குறியுங்
கொண்டென்னைச் "செல்"என்று
சீறி னளே!
—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
தினவெடுக்கும் தோள்வலிவும்
திண்மைமிகு உடல்வலிவும்
தனதாய்க் கொண்டு
வனத்திடைவாழ் புலியின்முன்
வனப்புமிகு கடமாவும்
வெருதல் போல,
மனத்திட்பம் உடையார்முன்
மாற்றாரின் படைவலியும்
மாய்ந்தே வீழும்.
—அ. கோமதிநாயகம், விருதுநகர்.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
சினத்தீயை வெளிக்காட்டும்
சீற்றஞ்சேர் கடுமொழியும்
சிடுத்த முகமும்
மனத்தாலே எண்ணிடவே
மகிழ்வூட்டும் மருக்கொழுந்தே
முல்லைச் சிரிப்பே!
உனக்கென்றும் வேண்டாமாம்;
உளமென்மைப் பெருங்குணத்தை
உயிரே கொள்நீ!
—வி. எஸ். வேலாயுதம், சென்னை-14.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
தினவெடுத்த பெருந்தோளும்
தேடிவைத்த திரண்டபொருள்
பலவாய்க் கண்டும்
எனக்கையோ அவர்முகத்தை
நேரில்காண மனமில்லை
ஏனோ தோழி?
உனக்கேதும் அதன்விளக்கம்
தெரிந்தாலும் இங்குரைத்து
மனதை மாற்று!
—கரு. ரேவதி, மதகுபட்டி.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்,
தினவெடுக்கும் திண்தோளும்
திரண்டெழுந்து பகைவீழ்த்தும்
திறனும் கொண்டோர்
அணியாக இருந்திட்டார்
தமிழகத்தின் புகழ்காக்க
அறிவீ ரன்றோ!
இனியேனும் இன்தமிழா
இறவாத புகழ்காக்க
எழுச்சி கொள்வாய்.
—ம. முகமதுமைதீன்.

★

தனந்தேடக் கரமதிலே
சிலம்புடனே தனிவழியில்
சென்று னன்னேன்
மனம்நோகக் கொலைபுரிந்தான்
கயலுடையான் எனவறிந்தாள்;
துடித்தாள்; மங்கை
அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
புனல்நாட்டின் அறநெறியும்
நடுநிலையும் புலப்படவே
எரித்தா ளவ்வூர்
—தாரையூரான், தாராபுரம்.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
நினைவென்னும் திரையினிலே
மாறவில்லை, நெஞ்சமதைக்
கவர்ந்தே சென்ற
எனதருமை அத்தானே!
வாடுகிறேன் பிரிவென்னும்
நெருப்பால், நீவிர்
மனம்வைத்து வந்திடுவீர்
துன்பத்தை மாற்றிடுவீர்;
வாழ வைப்பீர்.
—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

★

கனிமொழியே! நீயேகேள்
காதலினால் ஆணொருவன்
கட்டுண் டானேல்
அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
பனிக்கட்டி மேல்விழுந்த
தீப்பொறியாய் அடங்கிவிடச்
சோர்வான்; பூத்த
அனிச்சமெனும் இதயத்தைக்
காதலிக்குச் சூட்டிடவே
குழைவான் அன்பால்.
—கு. பொழிலன், பொன்னேரி.

★

கிணற்றுக்குள் தவளையெனத்
திறமிலராய் நலமிழந்து
கிடந்தோ ரெல்லாம்
இனப்பற்றும் மொழிப்பற்றும்
உடையவராய் வருபகைவென்
றினிதாய் வாழ
அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்,
தினவெடுக்கும் திண்தோளும்
பெறச்செய்த நமதண்ணு
திறந்தான், என்னே!
—கு. பரிமளம், கமுதி.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
கனல்சிந்தும் பெரும்பகையைக்
கலங்கவைக்கும் தடந்தோளும்
கையும் காலும்
புனல்சிந்தும் விழியாள்முன்
புலவியுற்றுத் துடிதுடிக்கும்
பொல்லாக் கண்ணும்
அனல்பட்ட புழுவெனவே
அவதியுற்று மிகநொந்து
அழிவ தேனோ!
—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
தினவெடுத்த தோளுடனே
வாளெடுத்துத் திருக்கரத்தால்
வையம் போற்ற
கனல்பறக்கப் போரிட்டு
ஆரியரைக் கதிகலங்கச்
செய்தான்; சேரன்
இனம்வந்த செந்தமிழா!
தூங்காமல் எழுச்சிகொண்டு
வெற்றி காண்பாய்!
—கே. வி. வீரண்ணு, சித்தையங்கோட்டை.

★

அன்றலர்ந்த தாமரைப்பூ
மேனிநல்லாள் அவமானம்
உற்று ளென்று,
குன்றெடுத்த பெருந்தோளான்
தென்னிலங்கைக் குணக்குன்று
தாளா னகி,
அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
சினம்பொங்கப் புறப்பட்டான்
தென்னவனின் திறங்கண்டோர்
வியந்தார் மாதோ.
—சிவ. சுப்பு, சிவகிரி.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்,
அஞ்சா நெஞ்சும்
கனல்கக்கும் படையுடனும்
அசோகனன்று கலிங்கத்தை
வென்ற பின்னர்
புனற்கங்கைக் குருதிவெள்ளம்
நிறைந்தோட, மனம்பதைத்தே
வாளைத் துறந்தான்;
புனிதபுத்தன் மலர்ப்பாதம்
பணிந்தெழுந்தான்! அக்கணமே
அறத்தில் நின்றான்!
—இர. மனோகரன், சென்னை-12.

★

அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
புனல்கக்கும் கருவிழியில்
குதித்தெழும்பும் புதுஒளியைப்
பார்த்துக் கெஞ்சும்!
இனங்காக்கக் களங்கண்டோர்
எதிர்த்தெழும்பும் பகைநெஞ்சைப்
பிளந்தெ டுக்கும்
மனங்கொண்டோர் மதிமுகத்தாள்
பஞ்சணையில் தோற்றோடும்
நிலைதா னேனோ?
—ரவி, மதுரை.

★

புனல்கக்கி நுரைகொண்டு
இசைபாடி எதிர்கின்ற
பேராறு நாட்டில்
மணல்கக்கி வளங்கக்கி
பயிர்தன்னை வாழ்விக்கும்
பான்மை போல
அனல்கக்கும் இருவிழியும்
அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
அஞ்சா நெஞ்சும்
இனம்வாழ மொழிவாழ
எழுந்தின்று பணிபுரிக!
இன்பம் சேர்த்தே!
—கேசரிக்கண்ணன், கோவை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.